பெயர் அறிய்ப்பொரு ஏடு

X 01

மார்க்கமாம் புலத்தியனே மச்சகேந்திரா
மதிப்புடனே கூறுகிறேன் மைந்தா கேளு
தீர்க்கமுடன் நாகமது பலமொன்றாகும்.
திறமான சிங்கியது பலமுங் கால்தான்
தீர்க்கமலமானதை ஒரு வீரமப்பா
சிறப்பான பலமதுவும் காலதாகும்
சேர்க்கின்ற மதியுப்பு பலமுங் கால்தான்
புகழான லிங்கமது பலங் காலாமே 303

காலான சரக்குவகை கணக்கதாக
கூறுவாகத் தானிறுத்திக் கல்வமிட்டு
மேலான நாகமதைப் பொடியதாக்கி
மேன்மைபெறச் சரக்குதனையொக்கச் சேர்த்து
தாலான சம்பாத்தின் சாற்றாலாட்டி
தகைமைபெறப் பில்லையது வேசாய்த்தட்டி
சேலான ரவிதனிலே காயவைத்து
செம்மையுடன் வோட்டி விட்டுச் சீலைசெய்யே 304

சீலையது யெருசீலை வுறுவாய்ச் செய்து
செம்மையுடன் கோழியென்ற புடந்தான் போடு
மாலைதனில் புடமாறியெடுத்துப் பாரு
மன்னவனே செந்தூரமென்ன சொல்வேன்
வேலையென்ற செந்தூரந்தனையெடுத்து
மேன்மைபெறப் பின்னுமந்தக் கல்வமிட்டு
ஆலைபோல் தானரைத்துப் பில்லைசெய்து
அப்பனே ரவிதனிலே காயப்போடே. 305

போடேதான் யிப்படியே பத்திமுறை போடு
போக்கான செந்தூரஞ் சிவப்புமைத்து
நீடான செந்தூரம் பதனம் பண்ணு
நீமகனே மறுபடியும் பகரக்கேளு
கூடேதான் யின்னுமொரு மார்க்கங்கேளு
குறிப்பான ரவியென்ற செம்புதானும்
ஆடேதான் செம்பதுவும் பலந்தானொன்று
அப்பனே யிடையதுவும் நிறுத்துக்கொள்ளே. 306

கொள்ளவே செம்பதுவைத் தகடாக்கி
கொற்றவனேயதற்கு நிகர் மருந்து கேளு
எல்லாவும் பிசகாது புலத்தியா கேள்
என்மகனே மருந்து வகையானுரைப்பேன்
இல்லாமல் நேர்ந்து கௌரியப்பா
திருவானலிங்கமது பூரமப்பா
உள்ளபடி சொல்லுகிறேன் கெந்திதானும்
உத்தமனே வீரமது சரியாய்க்கூட்டே 307

கூட்டவே வகைவகைக்குக் கிலதாக
குழைவே தானரைப்பாய் சம்பாத்தால்
தாட்டிகமாயெண் சாமம் அரைத்தபின்பு
சாங்கமுடன் தகடதனில் மேலேபூசி
மாட்டவேயாய் ரவிதனிலே காயவைத்து
மன்னவனே ஓட்டிலிட்டுச் சீலை செய்து
தேட்டமுடன் கோழியென்ற புடந்தான் போடு
தேசிகனே புடமாறியெடுத்துப் பாரே 308

பார்க்கையிலே செந்தூரமென்ன சொல்வேன்
பாலகனே புலத்தியனே பண்புள்ளானே
சேர்த்துமே செந்தூரந் தன்னையெடுத்து
திராபாசந் தனிந்திருந்து சிறியபாலா
ஆர்க்கவே மறுபடியும் கல்வமிட்டு
அப்பனே மைபோல அம்பாத்தால்
தீர்க்கமுடன் மைபோலேயாட்டமைந்தா
திறமுடனே பின்லியது செய்பக் கேளே. 309

செப்பவென்றால் ரவிதன்னிலே காயப்போடு
செங்கமலக் கையானே துய்யபாலா
ஒப்பமுடன் ஓட்டலிட்டுச் சீலை செய்து
ஓகோ கோநாத் கஜ்பாகம் வையய்யா
அப்பனே கோழியென்ற புடந்தான் போடு
அரகரா என்ன சொல்வேன் செந்தூரந்தான்
திப்புரவாய்ச் செந்தூரந் தன்னையெடுத்து
திரைராசு அந்தரனே பத்து முறை போடே 310

முறையான முறைபாடு பிசகாவண்ணம்
முடையான புலத்தியனே மேதன்மையோனே
குறையதுவும் நேராமல் குணமுள்ளானே
கொற்றவனே பத்துமுறை யிப்படியே போடு
திறமான செந்தூரமென்ன சொல்வேன்
தீர்க்கமுள்ள மருந்ததனைப் பதனம் பண்ணு
நிறையான முறைபாடு யின்னஞ் சொல்வேன்
நீதியுடன் மாணுக்கள் பிழைக்கத் தானே. 311

தானென புலத்தியனே திண்மையோனே
திண்மையுள்ள பெரும் பாலா மச்சகேந்திரா
கோனென யெனதைய ரசுவனியாந் தேவர்
கொற்றவனாரந் தனுக்கு அனைத்தர்மம்
தேனென மனோன்மணியாள் கிருபையாலும்
தேசாளியின் சின்மயத் தினருளினாலும்
பானென பரஞ்சுடரின் புண்ணியத்தால்
பகருகிறேனின்னமொரு மார்க்கங்கேளே. 312

மார்க்கமாம் புலத்தியனே மதிவல்லோனே
மாசற்ற கிரவங்கம் பாஷாணந்தானென்று
தீர்க்கமுள்ள சத்தியது வழுவாய்ச் செய்தீட
திகழுடனே திகட்டதுவும் நையத்தட்ட
ஆர்க்கவே தானதிமேல் சுத்தானென்று
புகழான குருசுட்டனைத் தம்பா
ஏர்க்கவே சரக்கதுவும் வேரதாக
யென்மகனே யுடைகண்டு நிறுத்துக் கட்டே 313

நிறுக்கவே சரக்கதனைக் கல்வமிட்டு
நேர்பட வெண்மை போல் தாமரைத்து
பொறுக்கவே வங்கமென்ற தகட்டைப் பூசி
பொங்கமுடன் ரவிதனிலே காயவைத்து
பெருக்கவே வோட்டதிலிட்டு மேடையேதான்
பேரான கவசமது வழுவாய்ச் செய்து
செருக்குமுடன் வராகமென்ற புடந்தான் போடு
செம்மையுடன் புடமாறியெடுத்துப் பாரே. 314

பாரேதான் கிளாங்கிதுவாய்க் கலங்கிநிற்கும்
பாழ்கான காலங்கதனை யெடுத்துப்பாரு
நேரேதான் சரக்குவகை சேர்ந்தவங்கம்
நெடிதான அரக்கெல்லாங் கல்வமிட்டு
திரேதான் சம்பாத்தின் சாற்றினாலே
தீர்க்கமுடன் றனரைப்பாயெட்டுச்சாமம்
கூரேதான் றனரைத்துப் பில்லிகட்டி
குற்றமது நேராமல் ரவியில் வைவலே. 315

வைத்துமே யோட்டவிட்டு நீடுமேடு
ஆரம்பெரிய சீலையது வலுவாய்ச் செய்து
பொய்த்துமே போகாமல் புண்ணியவானே
புகழான புடமது அம் போடு போடு
மெய்க்கவே செந்தூரமெடுத்துப் பாரு
மேன்மக்கள் பிழைப்பதற்கு புலத்தியா கேள்
மைக்கமலம் வீற்றிருக்கும் ஆயார் பாதம்
மன்னவனே யென்னாளும் போற்றுவேனே. 316

போற்றுவேன் பத்துமுறை யிப்படியே போடு
பொன்னான செந்தூரம் யென்ன சொல்வேன்
ஆற்றியே பூசையது வைகுவாய்ச் செய்து
அப்பனே செந்தூர மென்ன சொல்வேன்
நிற்றமுடன் செந்தூரம் போகும் போக்கு
நீதியுடன் தாமுறைப் பேன் நேர்மையாக
தேற்றமுடன் முறைபாடு சொல்லுவேன் யான்
தெளிவுடனே கைபாகஞ் செப்பக்கேளே. 317

செப்பவே மின்செய்த செந்தூரந்தான்
செவ்வையுடன் குணபாடு கண்டறிந்து
ஒப்பமுடன் பஞ்சலோகச் செந்தூரத்தை
ஓகோகோ நாதாக்கள் சொன்ன வண்ணம்
திப்பிதங்கள் நேராமல் தயவுள்ளானே
திணையுடன் பஞ்சலோகச் செந்தூரத்தை
மெய்ப்புடனே பஞ்சசூத மெழுகைதான் கண்டு
மேன்மைபெறக் கல்வமதில் போடுபோடே. 318

போட்டுமே அறுவகைச் செயநீர் தன்னால்
பொங்கமுடன் நனைப்பாய் நாலு சாமம்
நீட்டமுடன் நனைத்துக் குப்பிக் கேற்றி
நேர்மையுடன் மாக்கல்லால் மூடியேதான்
திட்டமாய் ஏழுசீ வலுவாய்ச் செய்து
திண்மை பெற ரவிதன்னிலே காயவைத்து
நாட்டமுடன் தாவாயாஞ் சட்டிதன்னில்
நிலம்பெறவே மணல்தனிலே கொட்டடாயே 319

கொட்டியே நாலுவிரல் உயரம் போடு
கொற்றவனே குப்பிதனை நடுவே வைத்து
திட்டமுடன் மேலுமந்த மணலைக் கொட்டி
தீர்க்கமுடன் மேற்சட்டி கொண்டுமூடி
சிட்டமுடன் சீலையது வலுவாய்ச் செய்து
சாங்கமுடன் ரவிதன்னிலே காயவைத்து
பட்டயம்போல் வாலுகையாந் தன்னிலப்பா
பாங்குபெறவே வெகுநாளெரித்திடாயே. 320.

எரித்துமே யிரதன்னை விட்டு
யென்மகனே புலத்தியனே யெழின்மாரா கேள்
செரிக்கவே தியாரியெடுத்துப்பாரு
சிவப்பான செந்தூரம் யென்ன சொல்வேன்
மறித்துமே செந்தூரங் கருந்திருந்தால்
முன்போல ஆறுவகைச் செயநீர்தன்னால்
குறித்ததொரு சாமமது கணக்குப்போல
கொப்பனவே கல்வமிட்டு அரைத்திடாயே.
321

அரைத்துமே மைபோல தானரைத்து
அப்பனே ரவிதன் லேகாயவைத்து
திரையதுவும் நேராமல் திய்யபாளா
திப்புரவாய்ப்பொடயாக்கிக் குப்பிக்கேற்றி
முறைபோலே முன்போலே மணலிக்கொட்டு
முனியான சித்தர்டநாதர் தம்மை
குறையொன்றும் நேராமல் செந்தூரந்தான்
குமுறவே சிவக்கவென்றுபணிந்திடாயே.
322.

பணிந்துமே செந்தூரத்தனையெடுத்து
பாவலனே நாவலனே பகர்வேனப்பா
திணிந்துமே சீசாவிற்பதனம் பண்ணு
தீகாற்ற செந்தூரமன்ன சொல்வேன்
அணியான செந்தூரம் பூசையப்பா
அப்பனே சொர்ணவயிரவன்றன் பூசை
கனிவுடனே பூசையது கொண்டபோது
காவலனே சாபமது நிவர்த்தியாச்சே.
323

ஆச்சப்பா பூசையது வானபின்பு
அப்பனே சிசாவிற் பதனம் பண்ணு
பேச் சொன்றுங் கூறாதே பூபாலா கேள்
பேரான கர்மிகளும் பாபருண்டு
பாச்சவுடனுண்மை யடுத்து மருந்து கேட்பார்
பாலகனே முறைபாடு வழியுங் கேட்பார்
மாச்சலது நேராமல் திண்ணிவு கொண்டு
மன்னவனே யாதொன்றுமில்லை யென்பாயே. 324

என்னவே மருமமது நீயுரைத்தால்
யெழிலுடனே யுன்னை யொன்றுங் கேட்கமாட்டார்
தின்னவே யொன்றுமில்லை யென்று கூறி
திப்புரவாய கலவிட்டுப் பின்னே சென்று
நின்னயமாய்த் தன்மனதி லுள்ளடக்கி
நாயகனே திம்பதிக்குச் செல்கவென்று
சொன்னயமாய் விடைபெற்றுப் போவாரப்பா
சித்தரனே யிந்திரனே சொல்லக் கேளே 325

செப்பவென்றால் வந்தெண்டமர்மங் கண்டால்
தேசிகனே புலத்தியனே கன்னியவானே
திப்பிதிங்கள் நேர்ந்துவிடும் நலிதான் போகும்
திரணியிலுந் தன்மேல் கருஅவைப்பார்
எப்படியு மெத்தனுயிர் போக்கவென்று
யெக்காலம் யுதகமுடிவு காலம்மட்டும்
ஒப்பமுடன் பகையதுவும் மனதிற் கொண்டு
உந்தனையும் கொல்வதற்கு நினைவாரே 326

நண்ணுவார் புலத்தியனே நாற்றசெந்திர
நானிலத்தில் புராவுடனேயிருக்க வேண்டும்
திண்ணமுடன் அநுதினமும் சித்தர்பாதம்
தீர்க்கமுடன் யென்னாளும் துதிக்க வேண்டும்
கிண்ணுதலாய்க் கண்டவர்க்கு யேழ்மை போலே
கொற்றவனேயிருந்துமே தான்காலம் போக்கு
பண்ணவே யுந்தனையும்மாறலாகா
பாவிலனே நாதர்பதம் நண்ணுவாயே.

327

நாதரென்றால் சித்தர் முனியருளும் வேண்டும்
நாட்டதிலே பெரியோர்கள் கிருபை வேண்டும்
போதமென்றால் போதமது ஞானங் கொண்டு
பொன்னவனே சிவஞானப் பேறுமே வேண்டும்
நீதமென்றால் துரியாதீதங் காண வேண்டும்
நிட்காங்கமான தொருகுறியே வேண்டும்
பாதமென்றால் மனோன்மணியாள் பட்சம் வேண்டும்
பாலித்தாளுந் தமக்குச் சித்தியாமே.

328

சித்தியாமட்டமிருந்துக் காண்பீரப்பா
சீர்பெறலாம் வையகத்து வசியங்கள்
முத்தி பெறவழியுண்டு பாதையுண்டு
மோர்க்கமுடன் நத்தவர்க்கு வொன்றுமில்லை
எத்திசையுங் கீர்த்தியுண்டு செயமுமுண்டு
யெழிலான சாயுச்சிய பதவியுண்டு
சித்தியத்தைச் சதாகாலம் மறக்காமற்றான்
சாங்கமுடன் சிட்டர்கள் பதம் போற்றுவாயே

329

போற்றியே புலத்தியனே அந்தரர் கேள்
பொங்கியுடன் முன்னுரைத்த செந்தூரத்தை
ஆற்றலுடன் ஆயாதி கற்பம் போல
அனுதினமும் மண்டலந்தான் அசிமானீ
தேற்றமுடன் தேனதனில் கொண்டாயானால்
திற்பரனே தேகமது கற்றூணாகும்
தோற்றமுடன் நெடுங்கால மிருக்கலாகும்
தேர் வேந்தே புலத்தியனே தெளிவாய் கேளே.
330

கோப்பா புலத்தியனே மச்சகேந்திரா
கெவனமுடன் சொல்லுகிறேன் கெவனபாலா
பீலாப்பா முன்னுரைத்த செந்தூரத்தை
பீட்சியுடன் மாண்டர்கள் கொண்டாரானால்
பாலாப்பா தேகமது போகாதப்பா
பாருலகில் நெடுங்கால மிருக்கலாகும்
ஆலாப்பா அவர் சமைது மேல் நோக்காது
அப்பனே செந்தூரப் பெருமை தானே.
331

பெருமையாம் செந்தூரமென்ன சொல்வேன்
பேரான மாண்டர்கள் சாகுங்காலம்
அருமையாய் ஆத்துமந்தானே குங்காலம்
அநித்தியமா மரணமென்ற சமீபந்தன்னில்
தெருமையுடன் மெய்ப்பாலில் தேனில் கொண்டால்
உத்தமனே பெருந்துமே வார்த்தை சொல்வான்
திருவிளையால் கிருபையினால் வார்த்தை பேசி
திரும்பியே தான்படுப்பான் திண்மைபாரே
332

10.1.86

பாரேதான் செத்தசவம் போலானதும்
பட்சமுடன் யெடுத்துமல் லோவார் தனை சொல்வார்
நேரேதான் முகத்தாவில் மொழிகள் கூறி
நேர்மையுடன்றான் போவார் கைலாயந்தான்
சீரேதான் பூபதியாஞ் செந்தூரந்தான்
இவலயத்திலோர் செய்வார் யோகிசெய்வார்
சீரேதான் செந்தூரம் போக்கைக் கண்டோர்
திராப/சக்கராதிகியே காணுவாரே.
333

காணுவார் செந்தூரங் கின்றியுண்டால்
காசினியில் நோயேது பிணிகளேது
ஆணவங்கள் காமியங்கள் மிகவுண்டாகும்
அப்பனே யேமாசிப்பலனுண்டாகும்
கோணவென்ற வாதமது யெண்பதும் போம்
கொடிதான சூலவலி பதினெட்டும் போம்
ஊணுடலந் தேகமது அறுதியல்லோ
உத்தமனே ரோகமது கிழன்று போமே.
334

போமேதான் சயரோகம் பதினெட்டும் போம்
பொல்லாத குன்மமெட்டும் பாண்டு ஆறும்
வேமேதான் மேகமென்ற இருபத்தொன்றும்
வெட்டவெளிக் காணகத்திலேகும் பாரு
ஆமேதான் ராசாது ராசக் கட்டு (ராசபிளவை)
அப்பனே பிளவையென்ற புண்ணும் மாறும்
நாமேதான் சொன்னபடி மதுமேகந்தான்
நாடாது உடல்விட்டு யேகுந்தானே.
335

ஏகுமே மந்திர காசம் போகும்
    மெழிலான சன்னி முதல் பதினெட்டும் போம்
போகுமே சுரங்களாறு பத்துநாலும்
    பொலிவான படைகளிருபத்துநான்கும்
ஆகுமே சொறிகளிருபத்திரண்டும்
    சர்பத்தின் விடமதுவுஞ் சண்ணிப் போகும்
வாகுடனே சில்விடங் காற்றுப் போகும்
    வயிற்றுவலி பொருமல் முதலகன்று போமே.
336

அகலுமே ரோகவகை யெல்லாம் போகும்
    அப்பனே கிர்ரணி வகையாவும் போகும்
நிகலுமே சர்வநோய் கிச ரோகம் போம்
    நீடான ரோமமது நிலைநில்லாது
திகலுமே அதிரமது பெருகிக் காணும்
    தீர்க்கமுடன் பல் விடங் காற்றுப் போகும்
புகலுமே தேகமதி கற்றாணுகும்
    புங்கசித்தி தேகமது மின்னும் பாரே
337

மின்னுமே தேகமது சிவந்து காட்டும்
    மிக்கான கண்ணிரண்டுஞ் செவ்வரியாகும்
தின்னுமே ரோமங்கள் கறுத்துக் காட்டும்
    திப்புரவாய் நரைதிரையு மற்றுப் போகும்
தென்பொதிகைச் சித்தர்முனிர்டகள் நாதர்
    தேர்வேந்த சட்டவர்க்கும் கிருபையாலே
மன்னரிடார் சாதிகிருபையாலே
    மாறாமல் தென்னவன் போலிருக்கலாமே.
338

இருக்கலாஞ் சதாகாலம் பிணிபும் நீக்கி.
செழிப்புடனே வையகத்தி லிருக்கலாம் பார்
சுருக்கமுடன் இன்னமொரு மார்க்கஞ் சொல்வேன்
அத்தமுள்ள கண்மணியே கருத்தாய்க் கேண்மோ
பெருக்கமுடன் யிம்மருந்தைச் சித்தர் பாகம்
பேசாமல் மௌனமதாய்ப் போக்குசொல்வேன்
இருட்கிடங் நீக்கியுடன் கொண்டார் போல
செழிப்புடனே தாக்கும் வகை கூறுவேனே.

339

கூறுவேன் முன்னுரைத்த சூத்திரத்தை
குணமுள்ள புலத்தியனே குருதேவனே
தேறுதலாய் லோகமதில் பாய்ச்சுதற்கு
தெளிவுடனே போக்குவகை செப்பக்கேள்
நாறுகின்ற செம்பதிலே நூற்றுக்கொன்று
நாட்டமுடன் றனுருக்கிக் குருவொன்றீய
மாறுதலாய்க் கிளிம்ப கன்று ரவிதனப்பா
மன்னவனே மாற்றதுவும் பத்ததாமே

340

பத்தான மாற்றதுவுமென்ன சொல்வேன்
பாங்கான தங்கமது சொல்லப் போமோ
சித்தான சித்துமுனி செய்யுந்தங்கம்
செம்மையுடன் பிறவியென்ற தங்கமாச்சு
முத்தான தங்கமது மென்ற தங்கம்
முதுலகில் நாதாக்கள் செய்யுந்தங்கம்
வித்தான படத்துக்கு உகந்த தங்கம்
வீரான தங்கமது சொல்லொண்ணாதே.

341

ஒண்ணுதல் தங்கமது கூறொண்ணாது
உத்தமனே அயத்தங்கம் புடத்துக்கேகோ
இன்னதனை வெள்ளிதனில் நூற்றுக்கொன்று
இன்னவனே தானுருக்கிக் கருவொன்றிய
மண்ணதனை வெள்ளியது பருக்கும் பாரு
மகத்தான மாற்றதுவோ நாவொண்ணாது
திண்ணமுடன் வாரடாத்துப் புடத்தைப் போடு
தீர்க்கமுடன் பசும்பொன்னும் கூறொண்ணாதே
342

கூறவென்றால் நாவில்லை பாவமில்லை
குளிப்பான தங்கமது மாற்றோபத்து
சீறலது வாராத அயத்தங்கமப்பா
செப்புகிறேன் காவிக்கும் புடத்துக்கேகா
மாறலது வாராதுவருத்தங்கம்
உரம்பெரிய நாதாக்கட்கு உகந்த தங்கம்
தேறலற்ற அயத்தங்கம் பிரிதிவத்தங்கம்
தெளிவான தங்கமென்றே செப்பலாமே
343

செப்பவென்றாலின்னமொரு வயணஞ்சொல்வேன்
செங்கலக்கண்ணனே குருவுள்ளானே
தப்பவென்ற கிடையனிலே கொடுத்தாயானால்
தப்பற்ற தங்கமென்றே யேமமாச்ச
சொப்பனவே நூற்றுக்குக் குருவொன்றிய
ஜோபான மாற்றதுவுங் கூறொண்ணாது
செப்பமுடன் வாரடாத்துப் புடத்தைப் போடு
செடதான தங்கமது கூறொண்ணாதே
344

சொல்ல வென்றால் புடத்துக் குவசையாத் தங்கம்
அடரொளி போல் வையகத்தில் வீசுந் தங்கம்
சொல்லனது உலகளாத்துக் குகந்த தங்கம்
கொற்றவனே ராசாக்களணியுந் தங்கம்
புல்லறிவால் யாமுணர்ந்து அறிந்தமட்டும்
புங்கவனே யாமுரைத்த பதவித் தங்கம்
அல்லல்வினை தானகற்றி வையகத்தில்
அப்பனே சதாகாலம் வாழ்குவாயே.
345

அகத்தியர், புலத்தியருக்கு அட்டபூபதி மாத்திரை கூறல்

வாழவேயின்னு மொருவயணங் கேளு
வளமையுள்ள புலத்தியனே மகேந்திரா
சூழவே அட்டபூபதிதானப்பா
அத்தமுடன் யாமுரைப்பேன் அந்தரங் கேள்
ஆழவே லிங்கமது பலமொன்றாகும்
சார்பானபூரமது பலமொன்றாகும்
நிழவே வீரமது பலமொன்றாகும்
நிட்காங்கமானதொரு சிங்கியாமே.
346

சிங்கியாம் பலமதுவும் வொன்றேயாகும்
சீரானபாசாணம் பலமொன்றாகும்
இங்கிதமாம் கெந்தியது பலமொன்றாகும்
எழிலான சூதமது பலமொன்றாகும்
அங்கமெல்லா தாளகமும் பலமொன்றாகும்
அப்பனே சரக்கெல்லா மொன்றாய்க் கூட்டு
தங்கசித்தி கொண்டதொரு சரக்கனைத்தும்
புகடுடனே குழிக்கல்லில் தன்னிலாட்டே
347

ஆட்டவே சாக்கெல்லாமொன்றாய்க் கூட்டி
அப்பனே மூலிவகை செப்பக் கேளீர்
நாட்டகமாய்க் கையானின் சாற்றினாலே
சிவனுடன் தானரைப்பாயாறு சாமம்
நீட்டமுடன் பெருங்கையான் சாமம் நாலு
நீடான பொற்கையான் சாமம் நாலு
வேட்டமுடன் பொன்னுவாரைச் சாமம் நாலு
வேகமொன்ற கருப்பானின் சாமம் நாலே
348

நாலான சாமமது அரைத்தபின்பு
நிலமான நெல்லிக்காய்ச் சாமம் நாலு
காலான முசுக்கையது சாமம் நாலு
திருவான நொச்சியது சாமம் நாலு
காலான கொடிவேலி சாமம் நாலு
தாக்கான ஆரையது சாமம் நாலு
மேலான மேனியது அரையப்பா
மேன்மையுள்ள பசலியது சாமம் ஆறே
349

ஆறான கரும்பசலி சாமம் நாலு
அப்பனே வேலியது சாமம் நாலு
நாறான புனல்தண்டு சாமம் நாலு
நேயகனே செம்முள்ளி சாமம் நாலு
கூறானமத்தஞ் சார் சாமம் நாலு
குறிப்பான துளசியின் சார் சாமம் நாலு
செவ்வள்ளியா ← பாறான செவ்வள்ளி சாமம் நாலு
செவ்வல்லியா
பாங்கான கண்டங்கத்தரி தான் சேரே.
350

சேர்த்துமே தானவரைப்பாய் சாமம் நாலு
செம்மனுடன்னமுந் தான் மேலி சொல்வேன்
தீர்த்தமெனுங் கருந்துளசி சாமம் நாலு
திறமான கொள தும்பை சாமம் நாலு
மார்த்தமெனும் விடதீர் சாமம் நாலு
மகத்தான குமரியது சாமம் நாலு
சார்த்தகியால் கொண்டதொரு மேலியப்பா
சிதுரான விரத்னு மேலி தானுங் கூட்டே
351

தானான மேலியது சொல்லொணாது
திண்மையுள்ள புலத்தியனே மச்சகேத்திரா
தேனான மேலியது காரமைத்த
பிரான — பிரமயன் ← தெகிடான மேலியப்பா பிரான மேலி
கோனான குரு மேலி செங்கண் மேலி
கொற்றவனே யீசுரமா மேலியப்பா
பானான மேலியது சாமம் நாலு
பனிங் குடனே றுவரைப் பாய் பண்பாய்க் கேளே
352

பண்பான மேலியது நெய்ச்சிட்டதாகும்
பாலகனே நாற் சாமமரைத்த பின்பு
திண்பான கிருங் கொள்ளு மேலியப்பா
திறமான தாழியது நாலு சாமம்
நிண்பான கோவைச் சார் நாலு சாமம்
நிலமுடனே தானவரைப்பாய் மைபோலாக
கிண்பாக பிரம்பிச் சார் சாமம் நாலு
கிறிப்புடனே தானவரைப்பாய் கிருவுள்ளானே.
353

கருவான மூலியப்பா யேதென்றக்கால்
கவிர்ச புலத்தியனே கவிர்சேந்திர
திருமான மூலியது பிரம்மையப்பா
தீர்க்கமுள்ள மூலியினால் சாமம் நாலு
மருவானசெந்தொட்டதழைதானப்பா
மார்க்கமுள்ளமூலியினால் சாமம் நாலு
எருவான சோணைப்புல்லாறுசாம்
யெழிவுடனே தானரைப்பாய் மைபோல் தானே
354

தானான கிளவட்டம் பூண்டுதானும்
திண்மையுடன் தானரைப்பாய் யெட்டுச்சாமம்
வேனான தழையப்பா கொட்டகாவேர்
வேட்கமுடன் தானரைப்பாய் நான்குசாமம்
கோனான பூகிளையென்ற சார்தானப்பா
கொற்றவனே தானரைப்பாய் யேழுசாம்ம்
தேனான மண்ணுக்கின் பூண்டுதானும்
தேற்றமுடன் தானரைப்பாய் சாமமெட்டே.
355

எட்டான சாறதனால் மைபோலாட்டு
யெழிலான ரவிதன்னிலே காயவைத்து
திட்டமுடனதில் சேர்க்கச் செயநீர் கேளு
திடமான செயநீர மேதென்றக்கால்
அட்டதிசை நாதாக்கள் கண்டாராய்ந்த
அரும்பொருளாஞ் செயநீர மருங்கானார்
சட்டமுடன் யானுரைப்பேன் சங்கையில்லா
சதுரான செயநீரின் போக்குதானே.
356

போக்கான செயநீரம் யேதென்றக்கால்
பொலிவாகச் செப்புகிறேன் போதிகையோனே
தாக்கான கல்லுப்பு பலமொன்றாகும்
தகைமையுள்ள இந்துப்பு பலமொன்றாகும்
நீக்கான மதியுப்பு பலமொன்றாகும்
நீட்டாங்கமான தொருகரியுப்பாகும்
நோக்கான வளையலுப்பு பலமொன்றாகும்
நொடதான உவருப்பு பலந்தான் கேளே.
357

கேளப்பா சுவட்டுப்பு பலமொன்றாகும்
கெடியான சாரமது பலமொன்றாகும்
நாளப்பா படிகாரம் பலமொன்றாகும்
நீட்டாங்கமான தொருவெங்காரப்பு
தாளப்பா நவச்சாரம் பலமொன்றாகும்
தாக்கான பூநீறு சரியதாகும்
மீளப்பா இதுவெல்லாம் ஒன்றாய்க் கூட்டி
மிக்கான கல்வமதில் போட்டிடாயே.
358

போட்டுமே பண்சலத்தை விட்டு ஆட்டி
பொங்கமுடன் றனரைப்பாய் சாமம் நாலு
நீட்டமுடன் அரைத்தபின்பு மைந்தா பாரு
நீட்டாங்கமான தொருபனியில் வைப்பாய்
வாட்டமுடன் பனிதனிலே சலமேயாகி
வளம் பெரியகாரமுள்ள செயநீராகும்
மீட்டமுடன் செயநீரில் வீரம் பூரம்
மிக்கவே சலத்தனிலே கரைத்திடாயே.
359

கரைத்துமே செயநீரைத்தான் றக்கிக்
கன்னவனே சீசாவிற் பதனம் பண்ணு
திரைத்ததொரு செயநீரைக் காரமேத்தி
தீர்க்கமுடன் முன் சொன்ன மருந்தையப்பா
நிரைத்துமே கல்வமதில் விட்டு மைந்தா
நிகழ்ச்சியுடன் றனரைப்பாயாறு சாமம்
விரைத்துமே போகாமல் மெழுகு பாகம்
விருப்பமுடன் செயநீரா லரைத்திடாயே 360

செயமான நீரதனா லரைக்கும் போது
செப்பவொண்ணாக் காரசாரங்கள் சேர்ந்து
நியமான பாசாணம் மீரடங்கி
நிலமான குளிகையென்ற பேருமாச்சு
சியமான குளிகைக்கு நாமதேயம்
சிருபமென்ற அட்டபூபதியுமாச்சு
சியமான சேர்க்கைகள் கிடலே போகும்
காரிணியிலோர் செய்வார் சித்தர் பாரே 361

சித்தானசித்து முனி தாமே செய்வார்
தீருலகில் மற்றவர்கள் செய்யமாட்டார்
சித்தமுள்ள யோகவான் ஞானவான்கள்
சிந்தரனே செய்வார்கள் மற்றோர் செய்யார்
தத்துவத்தில் மிகுந்ததொரு புத்திவான்கள்
சட்டமுடன் செய்வார்கள் மற்றோர் மாட்டார்
மெத்தனவே யுந்தமக்கு யாமுரைத்தோம்
வேதாந்தத் தாயினது கிருபைதானே. 362

தானென தாயினது கிருபையாலும்
சதாசிவத்தின் சொற்சொரூபவருளினாலும்
தேனென சித்தர் பதினெண்மர் தம்பால்
தேசொளியின் சின்மயத்தின் பெருமையாலே
கோனென வசிவணியாந் தேவர்பாதம்
கொற்றவனேயுந் தனுக்குவாய்த்ததல்லோ
மானென வண்டவத்தில் நீயுமப்பா
மாபாவியானவர்க்குமனம் விடாதே.
363

மனம் விட்டால் கர்மமது செய்யும்பாரு
மானிடர்கள் நல்லோர் பொல்லாருமுண்டு
தினமதுவும் வீண் போகா காலம்பார்த்து
தினகரனே சதாகாலம் பூரணத்தை
நினைவுடனே நியானமதி யூகச் சார்ந்து
நிதியுடன் சித்தர்பதம் பணிந்து போற்றி
சினமதுவும் நேரமேல் தீர்பணிந்து
சிற்பரனை நெடுங்காலந் துதிக்கநன்றே.
364

ஆதியான நிலைதனிலே அமர்ந்துகொண்டு
அப்புரவாய் யெளியோர்கள் நேர்தி கண்டு
மதியோடு வியாதிமுகம் பார்த்தறிந்து
மகாதேவர் தமை நினைந்து குருநினைந்து
சதிசெய்யும் சத்துருக்களைவரானதும்
சிக்கபடயுமாவறிந்து சண்டாளர்க்கும்
கெதிபெற வேணர்கமது மேவதற்கு
கீர்த்தியுடனுபான மறிந்துசெய்யே
365

செய்ய வென்றால் தேனதுவும் வெண்ணெய் தன்னில்
செய முட்டை யினியது வெண்ணெய் தன்னில்
உய்ய வெயனுப்பான மறிந்து கொண்டால்
உத்தமனே ரோகமது தீரும் பாரு
நைய வே மண்டலந் தான் கொண்ட பேர்க்கு
நோயகலே சகல விதரோகம் போகும்
தீய்யநல்ல பாலாகும் சந்தொரா கேள்
திப்புறவாய்ப் பத்தியது யில்லி தானே

366

இல்லியே போகும் வகை வியாதி கோடி
யெழிலான வயுவென்ற தெண்பதும் போம்
சொல்லி செய்யும் இல் விடங்கள் தாற்றுப் போகும்
செலியாத குன்மவலி தொலைந்து போகும்
மெல்லுகின்ற ஆசியொடு பிரவீச்சம் போம்
மேகமென்ற ரோகமது அகன்று போகும்
கல்லடைப்புச் சதையடைப்பு கழன்று போகும்
காசின்யிலின்னம் வருபிணி சொல்வேனே

367

பிணியான பிணியது மேகென்றக்கால்
பீலிகையும் மகோதரமும் பிறண்டே யோடும்
பிணியான இவுசை யொடு பிளவை போகும்
பொரனுகுன்ம மெட்டுபிடர் நோய் போம்
பிணியான கிரகிணியென்ற குடைச்சல் போகும்
பீற்றலென்ற கழிச்சலது பிடரபட்டோடும்
பிணியான கிரந்தி பதினெட்டும் போகும்
பித்தமென்ற மயக்கமது வாறும் போமே.

368

17.1.86

ஆறான கிரந்தி வகையாறும் போகும்
அப்பனே சாரமதி சாரம் போகும்
கூறான குடற் பிரட்டல் குடலம் போகும்
குறிப்பான சீதமென்ற பேதி போகும்
தூறான வார்த்தையென்ற பயித்தியம் போம்
தீராத சயரோகம் பதினெட்டும் போம்
மாறான முசல் வலியும் தாக்கை வலி போகும்
மகத்தான குதிரை வலியாவும் போமே
369

போகுமே விக்கலென்ற ரோகம் போகும்
பொல்லாத கபரோகமென்று போகும்
ஏகுமே பாதத்தின் வீக்கம் போகும்
எழுதான மேல்மூச்சு வுப்பிசம் போம்
ஆகுமே பொருமலென்ற ஏப்பம் போகும்
அன்னமே யுக்காரம் கீழ் நோக்காகும்
வாகுமே கண்டமதில் தொண்ணூற்று நோய்
வளமுடனே குடலம் விட்டுயேகும் பாரே.
370

பாரேதான் பெருமேச் சசைத்தியம் போம்
பாலகனே சொறி சிரங்கு பறந்து போகும்
நேரேதான் திராகமென்ற அழலீ போகும்
நெடிதான புண்புரைகள் ஆறல் போகும்
சீரேதான் செவ்வாணம் புடையும் போகும்
சீறுகின்ற பித்தத்தின் கோபம் போகும்
ஊரேதான் குறைநோயும் புண்ணும் போகும்
வீரான மேத்திரத்தின் கிரிச்சம் போமே
371

போகுமே நீர்ழிவு அதரும் போகும்
பொருந்துமுடன் மதுமேகக் கட்டதீங்கும்
ஏகுமே கெற்பவலி கெற்பரோகம்
பெயர்தான வாசனத்தின் மேலம் போகும்
பாகுடனே பவுத்திரமுங் கண்டமாலை
பாங்கான மார்பவுத்திரம் பறந்து போகும்
சாகுமே உறுப்புடனே அபான வாய்வு
சண்ணுமே புடலம் விட்டுச் சண்ணும் பாரே.

372.

சண்ணுமே குய்யத்தின் ரோகம் போகும்
சீண்டாயிருப்புவலி குலைநோயப்பா
நிண்ண வெமண்டையிடசூலயப்பா
நாடாது நேத்திர நோய் தொண்ணூற்றாறும்
திண்டதுமாய் கிழல்வாதம் அண்டவாதம்
திதறுமே குடல்வாதமகன்று போகும்
மண்ணிலே யில்லாது மற்ற ரோகம்
மாண்டறை விட்டுமல் லோடயுங் காணே.

373

டையுமே ரோகங்கள் தாதுவானாலும்
மானிலத்தில் போவதற்கு வையமுண்டோ
திடமான ரோகமெல்லாம் துவண்டே போகும்
சொற்பெரியகுள் வைதனைக் கண்டபோதே
திடதானகுள் கையால் கசடகன்று
தீயாதித் தேகமது திற்றாணுகும்
நெடதானகுள் கையது காரமைத்த
நேர்மையுடன் நாமுரைத்த கற்பமாமே.

374

 கூட்டம் பதினெட்டுக்கும் விசக் குளிகை கூறல்

திற்பமாமின்னமொரு மார்க்கம் பாரு
திருவானபுலத்தியனே மச்சகேந்திரா
அற்பமென்றுநினையாதே அறிவுள்ளானே
அன்புடனே சொல்லுகிறேன் புலத்தியா கேள்
சொற்பமென்ற குளிகையது விசக்குளிகையப்பா
சோராமல் கூறுகிறேன் முறைபாடாக
திற்பரமாம் கூட்டமென்ற குளிகையப்பா
செகதலத்தில் சாற்றுவெண்ணாக் குளிகையாமே
375

குளிகையாம் வெட்டரவிரை தேற்றான்வித்து
கூர்மையுள்ள கருஞ்சீரம் காட்டுச்சீரகம்
அசிஞ்சிலென்ற வித்ததுவும் பிறுயன் வித்து
அப்பனே ஆரியெனும் வித்து தானும்
திரிஞ்சிலென்ற வித்ததுவும் கூடச்சேரு
கெடியான ஊத்தையென்ற ஆர்வித்து
துளியான விராலிவித்தூமத்தைவித்து
திடப்புடனே காரெள்ளுவித்துஞ் சேரே
376

சேர்க்கவேயின்னம் வெகுவித்து கேளு
செயமான கண்டங்கத்தரியின்வித்து
பூர்க்கிவே மாளியென்ற வித்துதானும்
புகழான பிரம்மதண்டுவித்துதானும்
தீர்க்கமுள்ள பேய்ச்சுரையின்வித்துமாகும்
திறலான பேய்மிரட்டிவித்துமாகும்
ஆர்க்கவே பேய்க்குமட்டிவித்துமாகும்
அரகரா பேய்ப்பாகல்வித்துமாமே.
377

வித்தான பேய்ப்புடலின் வித்துமாகும்
வீரான புங்கனிட வித்துமாகும்
முத்தான கருவேலின் வித்துமாகும்
மேர்க்கமுள்ளா யெருக்கனிடவித்துமாகும்
சித்தானநீர் மேள்ளி வித்துமாகும்
சிதுர்ரான கோவையிட வித்துமாகும்
மத்தான பாகையிட வித்துமாகும்
மகத்தான யெரிகாலன் வித்துகாணே

378

தாணவேயின் னம் வெகுவித்துகேளு
திருவான காஞ்சிரா வித்துமாகும்
தோண வேமுருக்கினிட வித்துமாகும்
தோர்ரத ஆவாரையின் வித்துமாகும்
மாணவே யானியிட வித்துமாகும்
மன்னவனே தகரையுட வித்துமாகும்
நீணவே கிக்காயின் வித்துமாகும்
நிட்கிளாங் கூமான தெலுகான்றிதானே.

379

திரணன வித்துவகையின் னங்கேளு
திண்மையுள்ள பூபாலா தகைமையோனே
கோணன வித்ததுவுமே தென்றுக்கால்
கொட்ட தான பூவரசின் வித்துமாகும்
தேனன வித்ததுவு மேதென்றுக்கால்
தெளிவான கருஞ்சீம்பை வித்துமாகும்
மாணன கருந்தூளசி வித்துமாகும்
மகத்தான பத்திரையின் வித்துபாரே.

380

பாரப்பாயின்னம் வைகுவித்துஅண்டு
பாலகனே கண்மணியே பகரக் கேண்மோ
ஆரப்பா பேவேம்பு கருவேம்பப்பா
அப்பனே நிலவேம்பு நல்வேம்பாகும்
சேரப்பா வித்ததுவுஞ் சேர்க்க வேண்டும்
செழிப்பான கார்கோலின் வித்துமாகும்
தீரப்பா புனல்முருங்கைவித்துமாகும்
தீர்க்கமுள்ள கருங்காலிவித்துகூட்டு
381

கூட்டவே பலமொன்று வகைதானப்பா
கொற்றவனே மாப்போலேயிடித்துமைத்தா
மாட்டப்பா அதினூடே சர்க்குமித்திரம்
மகத்தான சரக்குவகை செப்பக்கேளீர்
தேட்டமுடன் சூதமுடன் கெந்திதானும்
தெளிவான மிருதாரசிங்கியோடும்
திட்டப்பா வைரியென்ற பாஷாணந்தான்
திறமான பூரமொடு தாரந்தானே.
382.

தானே கேள் தாரமொடு லிங்கந்தானும்
திக்கான காந்தமொடு காரஞ்சேரு
மானே கேள் வகைவகைக்கு பலமதாகி
மார்க்கமுடன் பொடியாக்கிச் சரக்கிற் சேர்த்து
தினமுடன் முன்சொன்ன தையநீரப்பா
தைசப்பமுடன் விட்டாட்டியுண்டை செய்து
வானமொடு கலசமென்ற குடுவைதன்னில்
வளமாகத்தான் போட்டுச்சீல்செய்யே.
383

நில்லென்று திகிசெய்து அடைப்பாண்டத்தில்
செப்புகிறேன் துவார மிட்டுக்கம்பியிட்டு
சில்லென்று தயிலமது யிறங்கும்பாகம்
சாங்கமுடன்கைபாந் செய்பாகந்தான்
நல்லதொரு குழிவெட்டத் தாழ்தன்னி
நடுவமைத்துச் சுற்றிலுமெருவடுக்கி
செல்லவே குழிதன்னில் பீங்கானிட்டு
செயம்பெறவே தயிலமதையிறக்கிடாயே
384

இறக்கியே தயிலமதைப் பதனம் பண்ணு
யென்மகனே புலத்தியனே தயவுள்ளானே
உறக்கமது நேராமல் தயிலந்தன்னை
உத்தமனே பதம்பணிந்து குருநினைத்து
சிறக்கவே சொர்ணவயிரவன் பூசை
சிற்பெறவே தானமைத்துவந் தளித்து
திறக்கவே தயிலமதை யாருங்காணாத்
தீர்க்கமுள்ள பூசைமுகம் வைத்துப்போற்றே.
385

போற்றியே தயிலமதைப் பதனம் பண்ணு
பொங்கமுடன் தயிலமதைக் கண்டால் சித்தர்
சாற்றியே யுத்தியையும் தாசணித்து
துப்புரவாய்ப் பெருமோசம் செய்வதற்கு
ஆற்றலுடன் வல்லவர் போல் நேசஞ்செய்து
அப்பனே கிட்டவந்து வுபதேசிப்பார்
சீற்றமது நேராது புண்ணியபாலா
சிறப்புடனே யேமாற்றல் செய்வார்பாரே.
386

பாரப்பா மதிகெட்டு மோசம் போகா
பாலகனே நல்மொழி கல்வி சேடங்கூறி
நேரப்பா பூரணத்தி தானுமீய்ந்து
ஒருமைதான சோடசோபாரஞ் செய்து
ஆரப்பா தயிலமெங் கேயென்று கேட்டால்
அப்பனே வாலையிட பூசைமார்க்கம்
தீரப்பா பூசை அமுகமிருக்குதென்று
தீர்க்கமுடன் செப்பிவிடு திண்ணந்தானே
387

திண்ணமாய் வாய்மொழிகள் கூறும்போது
திகழுடனே மெய்மொழி தானென்று நம்பி
எண்ணமுடன் தன்மனதில் வந்துகொண்டு
யெழிலுடனே தானிடப்பார் யோகிமார்க்கம்
உண்ணமுடன் சிதாகாலம் குருநினைந்து
வாகுடனே தயிலமதைப் பூமியுள்ளோர்
குண்ணதுவும் நேர்மல் தயிலமதை
குடமிருப்பாய் தைலமதைப் பாதுகாரே.
388

பாதான தயிலமதைய ருந்திதற்குப்
பகிருகிறேன் கைபாகஞ் செய்பாகந்தான்
வாதான தலமதை தீனியிற் கொள்ள
பாறக்குமடா குட்டம் பதினெட்டும் போகும்
தீதானயிம் மருந்துபிரயோகந்தான்
திறமான தயிலமது சித்தர் மெச்சும்
அந்தான தயிலமதைக் குட்டபாகம்
அப்பனே பொதுப்பிரயோகந்தானே.
389

யோகமாஞ் சர்வதேவ் கேட்டத்திற்கும்
பொருக்கு உனே நான் கொடுக்கச் சர்வதேவயும்
போகமது மேலேறும் புகழுள்ளோனே
பொங்கமுடன் விங் தாறுங் கேணியாகும்
தேகமது கற்றூணு யிரும்பு போலாம்
தேசமதில் நெடுங்காலமிருக்கலாகும்
சாகமது தோரா து தரணி மீது
சிதறுக்கும் யிருந்தாலும் தாரா தன்றே.

390

அன்றான தேகமது வனலேவீசும்
அம்புவியிலா ரேனு மருந்துவாரோ
குன்றான தயிலமது புவலயத்தில்
கொற்றவர் முடமன்னர் செய்வாருண்டோ
தென்திசையாங் கும்பமுனி வர்க்கத்தோர்கள்
தேர்ந்தெடுத்த வனமேலித் தயிலமப்பா
நின்றான தயிலமது நாவெண்ணநூது
நேட்டமனிலே இத் தர்முனி செய்வார்பாரே.

391

பாரான தயிலமது பார்லப்பா
பாறக்குமடாகச ரோகம் மகரோகம் ×
கூரான வனு பான மறிந்து கொண்டால்
கொற்றவனே ரோகமெல்லாங் கிழன்று போகும்
சேரான விசுசைத் துயை துவாணவும்
நெடு நேரஞ்சென்றலுங் குடலம் நீங்கும்
தாரான தில் விசங்களாற்றுப் போகும்
திரைரா சமன்னவர் கள் மெச்சம் சித்தே.

392

சித்தான வனமேவி குளிகையாலே
சிறிவரும் பாம்புவிசம் தலைக்கேறாது
முத்தானவித் திண்டதயிலமப்பா
மூதுலகில் சென்றாலும் முனிவர் நாதர்
எத்தனை யோகாடுவனந் திரங்களெல்லாம்
எழிலுடனே தான்திரிந்து கண்டாய்ந்து
வித்தான தயிலமதை மனதுவந்து
விருப்பமுடன் போதித்த சஞ்சீவியாமே.

393

திருசக்குகேடோர் மகாவேதை.

ஆமேதானின்ன மொருபோக்குச்சொல்வேன்
அப்பனே புலத்தியனே மச்சகேந்திரா
நாமேதான் சொன்னபடி திருசமாக்கும்
நயமுடனே கூறுகிறேன் நலமதாகி
தேமேதான் அருசிதுவும்பல மொன்றுகும்
திப்புரவாய்ச் சுண்ணமொன்றாய் கிரிதலே
தாமேதான் மேன்றுநாறுப் போடு
திண்மையுடன்றனைடுத்துச் செப்பக்கேளு

394

செப்பவென்றால் பூநீறு வீரந்தானும்
செடு
செயமான காரமது கூடச்சேரு
ஒப்பமுடன் ஆறுவகைச் செயநீர் தன்னால்
உப்பமுடன் அரைப்பாய் சரக்குசேர்த்து
உணமையுடன் தானரைப்பாய் சரக்குசேர்த்து
உண்மையுடன் தான றைப்பாய் ஐயாவா
திப்பிதந்தின் நேராமல் துய்யபாவா
சொங்குமுடன்றனரைத்துத் திருசக்கப்பி
திப்புரவாய்ச் சீலையது வலுவாய்ச் செய்து
திறையோடு மண்மறைவில் புடத்தைப்போடு

395

போடப்பா மெழுகுவதுவுங் கோதியாக
பொங்கமுடன் தீயாறியெடுத்துப்பாரு
நீடப்பா பற்பமது யென்ன சொல்வேன்
நீதியத்தில் காரமது நாவொண்ணாது
தேடப்பா பற்பமதைத் தானெடுத்து
தெளிவான மணலிரும்பை ராவி விளைந்தா
ஆடப்பா மூழச் சாறுவிட்டு ஆட்ட
ஆங்குடன் சித்தியது வலுவாய்ச் செய்யே. 396

செய்யவே சித்தியது வான பின்பு
செயமான சூதமென்ற ரசத்தைத் தாக்கு
வெய்யதொரு சுத்தி செனு டதிற்றினத்தை
வெகுளாமல் பத்துக்கு வொன்று சேரு
துய்ய நல்ல வாறுவகை செயநீர் தன்னால்
துப்புரவாய்த் தானரைப்பாய் நான்கு சாமம்
கைதவறு பாகமது பிசகிடாமல்
கருத்துடனே வழுகுபரந் தன்னிலாட்டே 397

ஆட்டவே மெழுகுதனைத் தானெடுத்து
அப்பனே காரமிட்டுச் செப்பக் கேளீர்
நாட்டமாய்ப் பஞ்ச அண்ணக் குகைதான் செய்து
தன்மைபெற முன்சொன்ன மெழுகுதன்னை
ஊட்டமுடன் குகையிலிட்டு மைந்தா பாரு
உலரம்பெற வெயிலில்விட்டுச் சீலைசெய்து
நீட்டமுடன் ரவிதனிலே காயவைத்து
நிலம்பெற வெளவுகுழியில் வைத்து ஊதிடாயே. 398

ஊாதவேமேசையது அருகியேதான்
உத்தமனே மணிபோலகண் விட்டாடும்
நீதமுடன் மேசைதனையுடைத்துப்பாரு
நீட்டுகொங்கமானதொரு செம்புமாச்சு
சீதமென்றுஞ் சரக்கதுவுங் கூடச்சேர்த்து
அத்தமுள்ள செம்பதுவாய் வர்ணம் பொன்னும்
ஆதவன்போல் திரண்டுருண்டசெம்புமாச்சு
அரகராவென்னசொல்வேன் அத்தந்தானே 399

தானான செம்பதுவையெடுத்துமைந்தா
திண்மைபெறு வங்கமது சரிநேராக்க
பானான வங்கமதைக் கொடுத்து ஊத
பாலகனே சிவனியது சொல்லொண்ணாது
தேனான சிவனியது துலாமொன்றுக்கும்
தெளிவான தங்கமது துலாமொன்றுக்கும்
மானான சூதமது துலாமொன்றுக்கும்
மகத்தான நாகமது துலாமொன்றுமே. 400

இன்றான சரக்கெல்லாம் ஒடுக்கிச்சாய்த்து
உத்தமனே லிங்கமது ரெட்டிப்பாக்கி
வென்றிடவே மனோசிலையும் நாலத்தொன்று
வேகமுடன் வீரமது ரெண்டத்தொன்று
குன்றான தாரமது மூன்றத்தொன்று
கூறான சரக்கதுவை நிறுத்துப்பாலா
நின்றான சரக்கெல்லாங் கல்வமிட்டு
நாயகனே தானரைப்பாய் சாமம் நாலே. 401

நாளான சாமமது அரைப்பாய் வைத்தா
நிறைமொரு வகைதசைய நீரிலே
தாலமுடன் றுனரைப்பாய் மைபோலாக
திண்மையுடன் ரவிதனிலே காயவைத்து
சீலமுடன் காசியென்ற குப்பிதன்னில்
சீர்பெறவே குப்பிக்குச் சீலையேழு
சாலமுடன் வாயை விட்டுச் சீலை செய்து
சட்டமுடன் ரவிதனிலே காயப்போடே.

402.

போட்டபின்பு குப்பிதன்னில் மருந்தைக் கொட்டு
பொங்குமுடன் மாக்கல்லு கொண்டு மூடு
நீட்டமுடன் சீலையது வலுவாய் செய்து
நீட்காங்கமா கவல் லோயெரிப்புப் பாகம்
காட்டமாய்த் தாவாயாம் பாண்டந்தன்னில்
தகைமை பெறுமணலதிலே கொட்டியேதான்
வாட்டமுடன் அடப்பாண்டந்தன்னிலப்பா
வாகுபெற விரல் நாலுயரம் போடே

403

போட்டப்பா குப்பிதனை மேலே வைத்து
புகழ்ச்சியுடன் மேலுமந்த மணலிச்செம்பி
நாட்டமுடன் மேற்பாண்டங் கவிழ்த்து மூடு
நயமுடனே சீலையது வலுவாய்ச் செய்து
ஆட்டமுடன் றணிக்க மண்ணு சேரு
அப்பனே வாலுகையா மேந்திரத்தில்
நீட்டமுடன் றணிப்பாய் கடாக்கினியாக
நிகிதமுடன் சாமமது யிருபத்து நான்கே.

404

நான்கான சாமமது வெரித்த போது
நன்மையுடன் செந்தூர மென்ன சொல்வேன்
பான்மையுடன் தீயாறி யெடுத்துப் பாரு
பகரொண்ணாது முருக்கம் பூ அருணன் போலாம்
கான்மையாம் வயிரவர்க்குப் பூசை பண்ணி
கின்னவனே குப்பிதனி லடைத்துப் பாரு
மேன்மையாஞ் செந்தூரஞ் சொல்லொணாது
மேதினியில் சித்தர்களுஞ் சொல்லாரன்றே.

405

சொல்லான செந்தூரங் காத்திரைத்த
சிந்தரனே புலத்தியனே அருணமாறா
கல்லானக் குப்பியது தீசாதன்னில்
கண்மணியே பொன்மணியே கவிவல்லோனே
வல்லானக் குப்பியிலே பதனம் பண்ணு
வாம்பெறவே பூசைமுகம் நோக்கியே தான்
எல்லவரும் தின்புகழச் செந்தூரத்தை
ஆதம்பெறவே சமாதிமுகம் போற்றிடாயே.

406

அநுபானம்

போற்றியே அனுப்பானம் புகல்வேன் பாரு
பொங்குமுடன் தேனிலே அனுபானஞ் சொல்
சீற்றமது தோராமல் சிறிய பாலா
சீராமல் வெண்ணெய் தன்னில் கொள்ள வேண்டும்
ஆற்றலது நீக்கியல் லோசுரணத்தில்
அப்பனே பனைவெல்லத்தில் பார்த்துக் கொள்ளு
தேற்றமுடனந்திச் சந்தி மண்டலந்தான்
தெளிவுடனே கொண்டுவரச் சித்தியாமே.

407

சித்தியாம் காய சித்தி யோகசித்தி
சின்மயத்தின் சித்தியென் றுரைப்பதாகும்
முத்திபெறும் வழிதனக்கு மேதன்மையாகும்
மேதுலகைக் கண்டறியும் ஞானசித்தி
சத்தியமாயிருந்தவர்க்குக் காயசித்தி
சதாகாலம் யோகநிட்டை காயமாகும்
நித்தியமாம் பூரணத்தைக் காணலாகும்
நிதியுடனனுபானமறிந்துகொள்ளே.

408

கொள்ளவே யனுபான மறிதல் வேண்டும்
குவலயத்திலறியாதார்க் கொன்றுமில்லை
தெல்லாமோர் தமானதொரு சித்தர்கோள்
தேற்றமுடனனுபானமறிந்தவர்க்கு
கொள்ளை கொண்ட செந்தூரத் தாதியாலே
கொற்றவனே கொண்டதெல்லாஞ் சித்தியாகும்
பிள்ளையழக் கண்டன்னைபால் தந்தாற் போல்
புலத்தியனே செந்தூரம் வாய்க்கிலாச்சே.

409

நீரும் வியாதி.

வாய்க்கவே புலத்தியனே மச்சசெந்தூர
வண்மையுடன் செந்தூரங் கொண்ட பேர்க்கு
மாய்க்கவே வாதசுரம் எண்பத்திரெண்டு
வாமான பித்தசுரம் தொந்தசுரம் தானும்
ஏய்க்கின்ற சிலேத்துமத்தின் சுரங்கள் நீரும்
யெரிவான நீரிழிவு பதினெட்டும் போம்
வாய்க்கின்ற தோஷம் வெளி தொண்ணூற்றாறும்
துகைகெட்டுப் பதிசெட்டுடுருந்தானே.

410

ஓடுமே சன்னி பதினெண்ணும் போகும்
உகந்த வலி யிருபத்தோர் வலியும் போகும்
நாடுமே சாமமா தேவி போகும்
நாங்கிமுடன் அக்கிரத்தின் மென்று போகும்
பாடுமே பயித்தியமும் சயித்தியமும் போகும்
பாங்கான யிரைப்பிருமல் பறந்து போகும்
கூடுமே கபரோகங்கள் காசம்
பொல்லாத யிருமலொடு கபமும் போமே. 411

போமே தான் அஸ்மாந்தை குடற் பெருக்கல்
பொல்லாத கிவுசை யொடு பொருமல் தீரும்
ஆமே தான் நீராம்பல் கட்டு தீரும்
அப்பனே குதிங் காலின் மேகம் போகும்
வேமே தான் வல்லாங்கால் திமிரும் போகும்
வேதமில்லா கிரவாதம் கூமன்று போகும்
கோமே தான் நடுக்கல் முதல் வேர்வை போகும்
நரம்புகளில் புடைக்கின்ற நீரும் போமே. 412

நீரான விசர்க்கிலா கின்று போகும்
நிசிதமில்லா புண்புரைகள் கடலே புக்கும்
சேரான பல்விசங்கள் பல்ரோகங்கள்
சேர்ந்த தேகமது வதியுமட்டும்
கூரான தவளையென்ற புத்துப் போகும்
கொடுதான அரையாப்புப் புத்துப் போகும்
வீரான புடைகரப்பான் விரண்டே போகும்
வீக்கில் சத்தியமுண்மை போகுந்தானே. 413

தானென பிரகாசமான பூபா
திண்மையுள்ளா புலத்தியனே மச்சகேந்திரா
தேனென கூற வாயில் விசமும் தீரும்
தெளியாத மயக்கமொடு கிறக்கல் போகும்
மானென மதிமயக்கம் கன்றுபோகும்
மலினமுடன் தேகஞ் சோர்வுமெஞ் சுருதல்
பானென மதமேச்சை நுரைதான் வாயில்
பறக்குமே யுடலை விட்டுப் பறக்குமே பாரே. 414

பாரேதிரன் செந்தூரம் பணவெடைதானப்பா
பாலகனே இஞ்சிதனில் கொண்டாயானால்
வீரேதான் சுருக்கேறி நாவிற்றங்கி
மிக்கான நீர்த்துவமது மேகம் போம்
கீடரேதிரன் குலாமல்லிச் சாற்றிற் கொண்டால்
கொற்றவனே மூலமேலமகன்று போகும்
தேரேதான் கைபாகமனுபானந்தான்
தெளிவுடனேயறிந்தவர்க்கு வாய்க்குங்காணே 415

காணவே பசுவெழும்பில் தங்கும் ரோகம்
பசுத்திமே சர்மமதில் கிட்டகாணும்
காணவே செந்தூரம் பணவெடைதானப்பா
நெருங்கொன்னைத் தைலத்தில் கொண்டாயானால்
ஆணவங்கள் தானொடுங்கி ரோகம் போகும்
அப்பனே அண்டமன்றவாதி மேகம்
மாணவே பீசத்தின் கட்ட போகும்
மாளாத நீக்குரத்தமகன்று போமே. 416

அகன்றிடுமே அண்டமதில் காற்றுப் போகா
அப்பனே சடை நீரும் பறக்கும் பாரு
நிகன்றிடுமே தூர்மாமிசங் கரைந்து போகும்
நாட்டுநான் அண்டமது சிறுத்துக் காணும்
புகன்றிடுமே நோயேதுநரம் புதன்னில்
புடைக்கின்ற ரத்தத்தின் கெடுத் போகும்
செகத்தனிலே வாதமென்ற அண்டவாதம்
செடத்தை விட்டுப் போகுமென்றே முன்சொன்னரே
417

சொன்னதொரு போதமதில் பாண்டு வீக்கம்
சோருகின்ற தசைவாதம் காலிடுக்கில்
நின்னயமாய் வர்த்திக்கு மெசமேகந்தான்
நிலினமுடன் கரைநீங்கி வெருப்பேகாணும்
தின்றமுங் குன்றதுமகத்தில் வங்கி
திருமாறிப் போகுமென்று சித்தர் சொன்னார்
புன்னகையா வாமுரைப் போம் சித்துபாலா
புங்கவனேயுந்தமக்குக் கூறினேனே.
418

கூறினேம் வசவன் யார் கிருபையாலே
குவலயத்திலுந் தமக்குயித்தப் பாகம்
தேறியே பாகந்தானறிந்து
தேற்றமுடன் யாமுரைத்தோம் தெளிவுரானே
மீறியே பாகம் பிசகிடாமல்
மேன்மையுடன் செய்வதற்கு மெல்லாஞ்சித்தி
ஆரியங்கள் கூறவில் உயித்தபாகம்
அப்பனே யாமுரைத்தோம் சத்தியந்தானே.
419

சத்தியமா யுரைத்ததொரு மார்க்கமப்பா
தாரணியி லொருத்தரும் விள்ளார் கண்டீர்
புத்தியுள்ள சீடருக் குயித்தப்பாகும்
பூவுலகில் வாய்க்குமெல்லாமற் றோர்க்கில்லை.
பத்தியுடன் சித்தர் பாதம் வணங்கினோர்க்கு
பார்மீதில் கிட்டுவது பான்மையாகும்
நித்தியமும் குருபதத்தை வணங்கிப் போற்று
நீடாழி யுலகமெல்லாம் பதிந்து கொள்வீரே.

420

கொள்ளவென்றால் புலத்தியனே மச்சபூபா
கொற்றவனே யின்னமொரு பாடு சொல்வேன்
தெள்ளாமிர்தமான தொரு புண்ணியபாலா
தேற்றமுடன் கூறுகிறேன் தேர்வெந்தை கேள்
விள்ளவே செந்தூரப் போக்குதன்னை
விட்டகுறை தீர்ந்தியதோர் மாணிடர்க்கு
எள்ளளவு மிசகாது தேரும் வண்ணம்
எழிலுடனே பாச்சிதற்கு வகை சொல்வேனே

421

சொல்லவென்றால் செந்தூரந் தினையெடுத்து
அத்தமுள்ள ரவிதனிலே நூற்றுக் கொன்று
வெல்லவே தானுருக்கிக் கொடுவொன்றிய
வேதாந்தத் தாயினிட கிருபையாலே
வல்லதொரு செந்தூரமதை தன்னில்
மார்க்கமுடன் றானுருக்கிக் கணைதான் மாத்து
செல்லவே குகைதனிலே யுருகியேதான்
சிவப்பான தங்கம் போலாகுந்தானே

422.

தானான தத்துவமது யென்ன சொல்வேன்
தன்மையுள்ள தங்கமது தானானது
தேனான சயத்தங்கம் பிறவித்தங்கம்
தெளிவான பசுமையென்ற தங்கமாச்சு
மானான தங்கமது சிவயோகித்தங்கம்
மகத்தான தங்கமதை யென்ன சொல்வேன்
பானான பரா பரியாளுந் தமக்குப்
பாலித்த தங்கமென்றே செப்பலாமே 423

செப்பவென் றினியென்ன மொழிமார்க்கஞ் சொல்வேன்
செயலான ரவிதன்லே தாற்றுக் கொண்டு
செப்ப முடன்றானுருக் கிக் குருவையொன்றி
உத்தமனே கண்விட்டு ஆடும் பாரு
திப்பிதங்கள் தோறாது தயவுள்ளானே
தாரணியில் மானிடர்கள் அறியாரோதான்
எப்படியும் சித்தர் முனிவர்கள் நாதர்
யெழிலான வேதைமுகம் காணுவாரே. 424

காணுவார் வெள்ளியிலே நாற்றுக் கொண்டு
கண்ணவனே மாற்றுநீயும் கிழறப் போமோ
தோணுவார் நாதாக்கள் ரிடர்கள் தாமும்
தோற்ற முடன்று மற்றவர் மாற்று தன்னை
வேணுவார் மற்றோர்கள் காணமாட்டார்
வேதாந்தத் தாயினது வருளிருந்தால்
கோணாதயும் தோராமல் குருதவானே
குவலயத்தில் கண்டறிவார் புண்ணியவானே. 425

21.1.86.

இழுதனும் திருமிகட்கு வாய்க்கும்பாரு
கூறுவார் கருமிகட்கு வாய்க்காதப்பா
அழுதமைனும் ஞானிகட்கு அமைக்கும்பாரு
அப்பனே யோகிகட்கு வாய்க்காதப்பா
பழுதமுள்ள பாவருக்கே கேற்குமப்பா
புலவில் சண்டாளர்க்கே கேற்குமோ சொல்
எழுதுள்ளாம் நீதானமென்று படைத்தோன்
எழில்பெற வேதிகைக்கிரத்தில் நண்ணுவாரே.
426

நண்ணயிலே சிவயோக ஞானங்கிட்டும்
நாதாந்தச் சித்தொளிக் காணலாகும்
திண்ணமுடன் மாற்றதுவைக் கண்டபோதே
தீர்க்கமுள்ள பாபமது விலகிப் போகும்
எண்ணரிய நற்பொருளைக் காணலாகும்
ஏகாந்தவட்டவெளி தன்னுக்குள்ளாம்
பெண்ணலயம் வொழிப்பது வேகாயசித்தி
பேரான சன்மார்க்கத்தியில் நில்லே.
427

நில்லெனயின்னமொரு போக்குச் சொல்வேன்
நிகழ்ச்சியாய்க் கூறுகிறேன் நீவல்லோர்கேள்
இல்லான குடவனிலே நாற்றுக் கொண்டு
கிருத்தனே தான்கொடுக்க மாற்றே பத்து
செல்லான தந்தமதுபிருக்க வாது
செப்புகிறேன் நாதக்கலைடம் வித்தை
வல்லான யோகத்தைக் கொடுக்கும் வித்தை
வாகுடனே நீதானியாருக்கும் வுத்தே.
428

கூத்தான சத்தூரத் தினையையுண் டூக்
கொற்றவனே அயச் செம்பில் தன்னில் வேறு
நாத்தருமோ ளா செம்பதுவும் ஆறலேகி
நலமான மாற்றதுவும் நாவண்ணது
நேர்த்தியுள்ள செம்பதிலே நாற்றுக் கொண்டு
நேர்மையுடன் றன்னொடுக்க சிவந்த பொன்னாம்
ஆத்திரமாஞ் சத்தூரங் காத்திலமத்த
திரைராச அந்தரணை செய்பக் கேளே.
429

அகத்தியர் புலத்தியருக்கு திருமேலவர்க்கத் தோர்
வரலாறு கூறல்

செப்பவென்றா லின்னமொரு மர்மந் தேரு
செத்திலைக்கிண்ணனே புலத்தியனே
ஒப்பமுடன் திருமேலவர்க்கத் தோர்கள்
ஓகோ கோ நாதாக்கள் சொன்னவாகு
திப்பிதங்கள் நோர்மல் துய்யபாலா
தீங்குமுடன் நீமுறைகளிருபத்தொன்றாம்
மெய்புடனே அவரவர்கள் சமாதிக்கேகி
இருப்புடன் சென்றவரை கூறுவேனே.
430

கூறுவேன் முதற்பாட்டன் வர்ணசித்து
குமாரனப்பா மைந்தரது நான்கதாகும்
மாறுபடா பௌத்திரர்கள் ஆறுமாண்பர்
வையகத்தில் சமாதிமுகங் கொண்டோர் மேவர்
தேறுதலா யிரண்டாவது பாட்டனப்பா
தெள்வான மவுனசித்து குமாரன் ஒன்று
திரணியும் பௌத்திரர்கள்ரண்டு பேர்கள்
நீதியுடன் சமாதிக்குப் போனவாறே
431

போனதொரு சமாதிக்கு ஒருவர் சென்றார்
பொலிவான மூன்றுங்கால் பாட்டனப்பா
வானமது தீர்த்திகொண்டோர் மகிழ்ந்து
அன்பான புத்திரர்கள் மூன்று பேர்கள்
தினமெல்லா யாபரர்கள் பௌத்திரர்தீ
தீர்க்கமுடன் தேத்திரத்தில் பதுங்கொண்டு
தானமென்னும் வனந்திரத்தில் வாசஞ்செய்து
தண்மணியே சமாதிக்குச் சென்றார் தானே
432

தொன்றான ஒருவரப்பா சமாதிகொண்டார்
உத்தமனே புலத்தியனே மச்சகேந்திரா
தென்திசையின் வாழுகின்ற நாலாம் பாட்டன்
செழும்புரிட புத்திரர்கள் நான்கு பேர்கள்
குன்றான மலைமீதில் வாசஞ்செய்யும்
கொற்றவர்கள் பௌத்திரர்கள் ஐந்து பேர்கள்
சென்றார்கள் சமாதிக்கு இரண்டு பேர்கள்
தேசத்திலிருந்தவர்கள் மற்றப் பேரே
433

பேரான புலத்தியனே புண்ணியவானே
பெருமைப் பேர்வைத்தான பாட்டனப்பா
சீரான குடேரிட புத்திரன்றான்
சேர்வைகொண்ட புத்திரர்கள் ஐந்து பேராம்
கீரான பௌத்திரர்கள் இரண்டு பேராம்
கூர்மையுடையோன்றனக்கு வாலையில்லை
தாராளமாகவல்லோர் சமாதிகொண்ட
சற்புத்திரனொருவனப்பா சொல்லுவேனே.
434

சொல்லுவேன் ஆறாவது பாட்டனப்பா
அவர்நமை மன்றாடியப்பா புத்திரன் கேள்
செல்லவே புத்திரர்கள் ரெண்டு பேராம்
வீரனை பௌத்திரர்கள் நான்கு பேராம்
நல்லதொரு சமாதிக்குப் போனாரப்பா
நாயகனை ஆறுவனப்பா சுப்பாணியாகும்
கொல்லிமலைதனிலோரம் சமாதி பூண்டார்
கொற்றவனே ஆறுவனப்பா கேளு கேளே.
435

கேளப்பா புலத்தியனே மச்சகேந்திரா
செவனமுடன் நானுரைப்பேன் கருவூரானே
தானப்பா ஏழாவது பாட்டனப்பா
தியாள மேள்ளா பிரிங்கு மகாரிடையாரப்பா
மீளப்பா புத்திரர்கள் ஆறு பேராம்
மிக்கான பவுத்திரர்கள் ஒன்பதாகும்
ஆளப்பா சமாதிமுகம் சென்றாரப்பா
அத்த மேள்ளா பாலர்கள் இரு பேரே.
436

இருவரும் எட்டாவது பாட்டனப்பா
இயலான சரவண பகவானப்பா
இருவரும் புத்திரன் நன்வான்றேயாகும்
ஓதோ சோபவுத்திரர்கள் ஆறு பேராம்
திருவான பர்வதம் போல் கீர்த்தி பெற்றோன்
திவலயத்தில் சமாதிமுகம் கொண்டேனப்பா
திருவான கரிமில்லாரிடை சாபத்தோன்
தீர்க்கமுடன் சமாதிக்குச் சென்றார் காணே
437

தாணுவே தயையான் பத்தாம் பாட்டனப்பா
. கருவான புசண்டமகாரிஷிதானப்பா
பூணவே மைந்தர்களுமிருவருண்டு
புகழான பௌத்திரர்களாறுபேராம்
பேணவே சமாதிமுகம் கொண்டேனப்பா
பேசற்ற புண்ணியர்களிரண்டுபேராம்
பாணமருங்கில் விபுளாரிரண்டுபேராம்
பாரிலத்தில் சமாதிமுகம் கொண்டார்பாரே

438

பாரப்பா பத்தாவது பாட்டனப்பா
பாருலகில் இருந்தமகாரிஷிதானும்
நேரப்பா புத்திரர்களிரண்டுபேராம்
நேடதான பௌத்திரர்கள் மூன்றுபேராம்
சேரப்பா சமாதிமுகம் கொண்டோனப்பா
சிறப்பான வரகவிஞரிரண்டுமாகும்
திறப்பா சமாதிமுகம் கொண்டபாலர்
இத்துமகாரிஷியின் றெசைப்பலாமே.

439

செப்பலாம் பதினோறாம் பாட்டனப்பா
செகத்தனிலே கீர்த்திகொண்டரிஷியோயாகும்
தப்புடனே சனிதுடும் சருகும் காயும்
அருந்தி திறபர சோதிரிஷிதானும்
தப்பிதமில்லாத மைந்தர் தரணிமீது
திறமையுள்ளபுத்திரர்கள் மூவருண்டு
ஒப்பின்மையான பௌத்திரர்தான்
உத்தமனே சமாதிமுகம் கொண்டோரண்டே

440

ரெண்டான பன்னிரண்டாம் பாட்டினப்பா
கெடததான வல கெதிகீர்த்தி பெற்ற
செண்டான கோகர்த்தனரிடதானப்பா
செந்தண்மால் பெயர் கொண்ட கின்னருக்கும்
தண்டான புத்திரர்கள் நால்வரிடு
திண்மையுள்ள பௌத்திரர்கள் மூன்றேயாகும்
மண்டலத்தில் சமாதிமுக மிருவர் கொண்டார்
மாநிலத்தில் மற்றவர்கள் இருந்தார் தானே.

441

இருந்தாரே திருமேலவர்க்கத் தோர்கள்
வெயிலான காயாதி கற்பங் கொண்டு
திருந்தவே சமாதிக்கு ஏகவென்று
தெளிந்ததொரு ஞானிகளைக் கூறுகின்றேன்
பொருந்தவே பதிமூன்றாம் பாட்டினப்பா
பொன்னுலகு சென்றவர்கள் காதையாகும்
அருந்தவத்திலிருந்ததொரு வரிடதானும்
அப்பனே அவருடைய வண்மை கேளே.

442.

உண்மையா மவர்தனக்கு மைந்தரப்பா
மண்ணுலகில் பாறத்தவர்கள் நால்வருண்டு
திண்மையாய் பௌத்திரர்களிருபேராம்
காசினியில் சமாதிமேதங் கொண்டோர் மூவர்
திண்மை பெற செவிடொன்று குருடுவொன்று
தீர்க்கமுள்ள இந்திரென்று செப்பலாகும்
நண்மையுடன் சமாதிக்குச் சென்றாரப்பா
நானிலத்தில் திருமேலவர்க்கம்பாரே.

443

வர்க்கமாம் திருமேலர் பாட்டனப்பா
ஒறையாதியுள்ளளவும் பகருவேன்யான்
இச்சமலம் வீற்றிருக்கும் பதிணாலாங்கால்
இலமான பாட்டனப்பா விருத்தியாகும்
ஓ சாற்றமுள்ள பாலரப்பா மேவருண்டு
சந்தானே பௌத்திரர்களிருவருண்டு
அற்பமென்றெண்ணியாதே அருண்மைந்தா கேள்
அன்புடனே சமாதிமுகம் கொண்டோர்தாமே
444

திரமான பதினெந்தாங்கால் தானப்பா
திகைமையுள்ள பாட்டனப்பா கிப் பிரவியாகும்
சிரமணியமான தொருமைந்தரப்பா
சிற்புத்திரராறு பேர் புதல்வதப்பா
ஆமான பௌத்திரர்களிரண்டு பேராம்
அப்பனே சித்தர்பதம் கொண்டபேர்கள்
நாமனமான தொருசத்தவிரா
இலமான சமாதிமுகம் பெற்ற பேரே -
445

பேரேதான் பதினாறும் பாட்டனப்பா
பெருலதில் கீர்த்திபெற்ற கொடபாலந்தான்
நேரேதான் மைந்தரப்பா இரண்டு பேர்கள்
நெட்டதான பௌத்திரர்கள் நாலு பேர்கள்
பாரேதான் சமாதிமுகம் கொண்டபேர்கள்
பாருலகில் கீர்த்தியுள்ள சித்தர் வண்ணம்
ஆரேதானிவரைப் போல் சமாதிகொண்டோர்
ஆருமில்லை வையகத்தில் அறிவாய் காணே.
446

அறிய வெயின்னமை ருரைக்கப்பா கேள்
அப்ப னேபதினெழாம் பாட்டனப்பா
குறியான சோதிமகா ரிடதானப்பா
கொற்றவனே புத்திரர்கள் நான்குபேராம்
அறிவான பௌத்திரர்களாறு பேராம்
அப்பனே சைவிடையொருவர் உறவையாகும்
நெறியான பாலர்களிலுப தேசந்தன்
நேர்த்தியுடன் பெற்றவருமொருவர் கிணை.
447

கிணவே பதினெட்டாம் கால்தானப்பா
திருவான பௌடமகா ரிடதானாகும்
பூணவே இன்மயத்திலிருந்த இர்து
புகழான சமாதிமுகந்து கொண்டிருந்து
தோணவே வேதமுகத்துடந்த சித்து
தோற்றத புத்திரர்களாறு பேரம்
மாணமருந்து கில்வியுள்ளார் பௌத்திராதி
மகத்தானசித்தர் வர்க்கம் தானேயாமே.
448

தானான குருமேலவர்க்குமாகும்
தாக்கான சப்பாணி தொண்டையாகும்
கோனான பௌத்திரர்களிருந்து பேரும்
கொற்றவனே தொண்டையன் நேசப்பலாகும்
தேனான சமாதிமுகமிருந்திருந்து
திகழான உபதேசம் பெற்றபாலர்
மானான பிரம்மசித்துமாந்தர் போலாம்
மகத்தான திருமேலவர்க்குத்தோரே
449

வர்க்கமாம் புலத்தியனே வண்மை மார்
வகுப்பான பத்தொன் பதாங் கால் தானப்பா
அர்ப்பமென்று யெண்ணாதே அன்புள்ளானே
அவனிதனில் கீர்த்தி கொண்ட சித்துவாகும்
சொற்பெரிய சார்பானு ரிடையென்பார்கள்
திணைமேன்யா புத்திரர்கள் ரண்டு பேராம்
உற்பனமாம் பொத்ராதியாறு பேராம்
ஓகோகோ திருமூலவர்க்கங் கேளே.

450

கேளப்பா ரெண்டு பேர் குருடார்க்கும்
கொடையான நான்கு பேர் உறமையாகும்
தாளப்பா நீர் இத்து சலசித்தாகும்
தாக்கான மகிய முனிரிடையென்பார்கள்
ஆளப்பா காளமகா ரிடதானென்பார்
தொல்லுலகில் கட்டறுத்த சித்தேயாகும்
ஆளப்பா திருமூலவர்க்கமென்பார்
அப்பனே சொல்லுகிறேன் அன்புள்ளானே

451

அன்னான புலத்தியனே மச்சகேந்திரா
அருளான விருப தாங்கால் தான் சொல்வேன்
உண்மையுடன் சம்பூரணரிடை தானாகும்
உகுப்பான புத்திரர்கள் ரெண்டு பேராம்
நன்னயமாய் பவுத்திரர்கள் மூன்று பேராம்
நாதாக்கள் திருவடையின் குலம் பெற்ற
புன்மையுள்ள சிறுபாலர் கண்ணையில்லி
புகழான திருமூலவர்க்கத் தோரே.

452

மேலமாமிருபத் தோர்நாலுஞ் சொல்வேன்
முதன்மையுள்ளா குண்டலமாம் ரிஷிதானும்
நீலமேலா புத்திரர்கள் மேவருண்டு
நிறைப்பான பௌத்திரர்கள் நால்வருண்டு
காலமதிற் பிறந்த தந்த ருசேய்காகும்
கண்ணில் கீ நாவில் கீ பாலருக்கு
ஆலவிட முண்டதொரு அன்பராகும்
அப்பனே கலியுகத்துச் சித்தென்பாரே.

453

இத்தனை சித்துவர்க்க மெடுத்துஞ் சொன்னேன்
சீர்பெரிய தசீமுறைகள் இருபத்தொன்றும்
சித்தமுடன் தசீ பகுத்து வேர்பிரித்துத்
தனித்தனியாய்க் கூறி விட்டேன் பின்னால்
கண்ணில்
புத்தியுள்ளா பெரியோர்கள் ரிடதானப்பா
பூவுலகில் கண்டறிவார் மற்றோர் காணார்
அத்திசையுங் கீர்த்திகொண்டு அவரப்பா
மெய்திருட்டனே காணுவார் கருணைபாரே.

454

பொன்மாற்றுயர்வு:-
அகத்தியர் புலத்தியருக்கோதல்

பாரப்பா புலத்தியனே பண்புள்ளானே
பகருகிறேன் மாணாக்கர் பிழைக்கவென்று
சீரப்பா லோகமதிற் கோடவேதை
செய்பினோர் நாதாக்கள் சித்தர்தாமும்
நேரப்பார்த்தகள் மெதலனாத்து கோட
நேர்மையுடன் பல நூலும் பாடலைத்தான்
தேரப்பா விம்முறைதான் சிமிட்டுப் போக்கு
செய்பினோர் கோடமுறையனந்தங் கேளே.

455

அனந்தமாம் கோடிமுறை செய்தவேனும்
அப்பனேயிம் முறையேயா வழுத்துவேன்பார்
தினமதுவுந் தொள்ளாதே சிறியபாலா
செப்புகிறேன் வர்ணமென்ற தங்கமப்பா
தினகம் போன்ற ராசனப்பா வீர ராசன்
திருத்துகிறேன் பலமதுவு மொன்றேயாகும்
தனம்பெரிய கெந்தியது வைத்தேயாகும்
சாற்றுகிறேன் புலத்தியனே தன்மையோனே 456

தின்மையாஞ் சாரமது நான்கேயாகும்
சாந்தமுடன் வெண்காரம் பலம் ரெண்டாகும்
உண்மையாம் பூரமது ரெண்டேயாகும்
உத்தமனே யிது வெல்லாங் கல்வமிட்டு
திண்மைபெற வாடுதின்னப் பாலாச் சாற்றால்
தீர்க்கமுடன் திரணையாய் வட்டுச் சாயம்
உண்மையுடன் ரவிதனிலே காயவைத்து
வாகுபெற யின்னுமது செய்யக்கேளோ - 457

செப்பவென்றால் புலத்தியனேயின்னுங் கேளீர்
தெளிவான வித்ததுவு மைதென்றாக்கால்
ஒப்பமுடன் முருக்கினுட வித்துதானும்
ஓகோ கோமுறைப்படவே சேர் நான்காகும்
திப்பிதங்கள் தேற்றமல் துய்யபாலா
சாங்கமுடன் சலமதனி லூறப்போடு
அப்போதே மேல்தோலு நீக்கிமைந்தா
அன்புடனே ரவிதனிலே காயப்போடே 458.

போடப்பா கைலேந்த பின்பு வித்தைத் தீர்ப்
பொங்கமென்புதுக் கலசந் தன்னில் விட்டு
நீடப்பா வாய்தனிலே சில்லு மிட்டு
நிட்கிலாங்கமான தைலம் சீலை செய்து
பாடப்பா பாடாக அறுதிகொண்டு
பலை குழியடக்க சந்து வாரமிட்டு
ஆடப்பா கம்பிய தூரமட்ட யேதான்
அப்பனே குழிதனிலே வைத்திடாயே.
459

வைத்துமே கலசமென்ற வடதயிலப்பா
வண்மை பெறப்பீங் கானடியில் வைத்து
மெய்த்துமே போகாமல் தயிலம் வாங்கி
பொன்னவனே தயிலமது வாங்குவோர்க்கு
சித்தெலாங் கொடுத்துமல் லோதயிலமாச்சு
சித்தராகத் தயிலமதைப் பதனம் பண்ணு
வித்தான தயிலமது யென்ன சொல்வேன்
வேதாந்தத் தாயினது தயிலமாச்சே
460

ஆச்சப்பா தயிலமது யென்ன சொல்வேன்
அப்பனே பொன் வண்ணத் தயிலமாச்சு
மூச்சப்பாயா ருக்கும் வெளிவிடாதே
மேதண்டத் தயிலமென்றே செப்புவார்கள்
திரச்சகின்ற தயிலமது யிதற் கொவ்வாது
தேனியில் நாதாக்கள் ரீடர்கள் சித்தர்
ஆச்சரியமாய்ச் செய்கின்ற தயிலமாச்சு
அப்பனே விள்ளாதே தகிதான் போமே
461

தரியான தயிலமதை யெடுத்துமைந்தா
சார்புடனேமுன் சொன்ன சரக்குதன்னில்
திரிபருத்துயித் தயிலமதைக் கல்வமிட்டு
தின்னவனே தானரைப் பாயெட்டுச் சாமம்
திரியான தயிலம தரவரைத் தயின்பு
திறப்புடனே இருவன்னையாகச் செய்து
குரியாமல் முன்போல கல்சந்தன்னி
குடற்பெறவே தாபமிட்டு யெடுத்துக்கொள்ளே
462.

தாள்ளாவென்றால் மார்க்கமது சொல்லொணாது
வெலயத்தில் நாதாக்கள் விள்ளாரப்பா
தள்ளாவும் மதசாது கைபாகந்தான்
யெடுத்துமே கல்வமதில் சரக்கையிட்டு
தெள்ளமிர்தமனை தொரு சரக்குதன்னில்
இல்லிட்டுத் திரியது வறுவாய்ச் செய்து
உள்ளபடி குழித்தயிலமுன் போலாக
உத்தமனே தானிறக்கிச் செப்பக்கேளே
463

செப்பவென்றால் தயிலமதையெடுத்துமைந்தா
செகந்தனிலே வைகுண்டத்து ஆடலாகும்
ஒப்பரிய வேலமது மாற்றுறுகும்
ஒகோகோ நாதாக்கள் கூறும்வண்ணம்
இப்பெரிய சாலமது யென்னசாலம்
கயிதில்பெரிய பொன்னதும் மாற்றேயாகும்
திடப்பமன்றகொதில்தான் உறல்தானிதும்
நேர்மையுடன்றனைடுப்பாய் மைந்தாபாரே.
464

பரைப்பா பொன்னை தகித்துக் கடாக்கி
பரிவுடனே முன் சொன்ன தயிலமப்பா
நேரப்பா தகட்டின் மேல் பூசியைந்தா
நெறியுடனே ரவிதன்னிலே காயவைத்து
தீரப்பா வோட்டதன் கீழுப்புக் காவி
சிறப்புடகெந்தீ மேலுமிட்டுமைந்தா
காரப்பா யெருவடுக்கிப் புடத்தைப் போடு
காணலாம் பத்துவயதுள்ள பொன்னே. 465

பொன்னான தங்கமது பத்துமாற்று
போகாது திராவகங்கள் புடத்துக் கேகா
மன்னான மன்னர்களுக்குகந்த தங்கம்
மாட்சிமையாய் சித்தர் முனிமர்க்குகந்தங்கம்
தென்னவனே புலத்தியனே புண்ணியவானே
தேசத்தில் சிட்டர்கள் முதல் கூறுவண்ணம்
தின்னவனேயுந்தமக் காய்ப்பிழைக்கவென்று
காசினியில் மனது வந்து சொல்லலாச்சே. 466

சொல்லவென்றுயித் தயிலம் மாற்றுங் கேளு
சொகுசமென்றதுய்யோனும் வெள்ளிதன்னில்
நில்லதொரு தகடாகத் தட்டமைந்தா
நிலம்பெற வேதயிலமதைப் பூசிமுன் போல்
வல்லமையாம் முன்னுரைத்த புடம் போலாக
மகிமைபெற புடம் போட்டு வாதினபின்
மெல்லவே யெடுத்துப்பார் பொன்தானேடு
மேன்மையுடன் தானிருக்கக் காணலாமே 467

தாணையாமித் தயிலம் குடவனிலே தாக்க
காசினியில் அயத்தங்கம் விரவித்தங்கம்
பூணையாம் சமுசாரிக் காணவித்தை
பூவுலகில் தருமிகட்கு வாய்க்குமோ சொல்
மாணமுந்து கல்வியுள்ள மாண்பர் காண்பார்
மாநிலத்தில் மதிமேடர் காண்பாருண்டோ
பாணமென்ற தங்கமது பசிமை தங்கம்
பாரினிலே புண்ணியர்க்கு வாய்க்குந் தானே.
468

தானென தயிலமது புலத்தியா கேள்
திசைமையுடன் பலநாளுங் கண்டாராய்ந்து
கோனென ராசருக்கும் ரிஷிகளுக்கும்
கொற்றவனே மனுநீதி தவறுவண்ணம்
பானென பார்பரியை மனதிலுன்னிப்
பட்சமுடன் யானுரைத்தேன் புலத்தியா கேள்
தேனென தோராம் நூலாகும்
தேற்றமுள்ள பன்னீராயிரந் தானுஞ்சே.
469

பொன்மாற்றுயர்வு

அச்சப்பாயின்னமொரு மாற்கஞ் சொல்வேன்
அப்பனே புலத்தியனே மச்சகேந்திரா
திாமப்பா காசினியில் யாருங் காணார்
திருவான பூவரசு ஆறுண்டப்பா
வேமப்பாமுத்தினதோர் மரத்தின் மேலம்
வெடுங்குயமேலமது பலந் தானூறு
திாமப்பா மண்பேழைக் காயவைத்து
திண்மை பொற்பொடி கண்டமாகுங்கே.
470

24.1.86.

ஆக்கியதோர் வேமனதை யெடுத்துப்பாலா
அப்பனே பெரும்பண்டந்தன்னிலிட்டு
வாக்கியமுந் தப்பாமல் சீலிசெய்து
வளமை பெறக் குழித்தயிலமாகவாங்கி
நோக்கமுடன் தயிலமதைப் பதனம் பண்ணு
நிம்பமுடன் பூவரசன் வித்துவாங்கி
பாக்கியங்கள் தான் பெறவே தூய்யபாலா
பாலகனே சோதுவாய்த் தூக்கிவாங்கே.

471

வாங்கியதோர் வித்ததனை வகுப்பாய்க் கோரு
உண்மை பெறமுன் சொன்ன தயிலமப்பா
யெங்கியே விழியாதே புலத்தியா கேள்
என் மகனே கவிராசகண்ணே பாரும்
இங்கியே முன்னுரைத்த தயிலமோம்
உத்தமனே தானெடுத்து வுகமையோடு
தேங்கியே பாரமல் தெளிவுள்ளானே
தேற்றமுடன் வித்ததனையரைப்பாய்தானே.

472.

தானென தயிலமதிலரைக்கும் காலம்
திற்பரனே சிற்பரனே தயவுள்ளானே
கோனனை யெனதையரசு வனியாந் தேவர்
கொண்டனைத் துப்பட்சமுடன் குறித்தபாகம்
மானென கொந்தியது பலம்பத்தாகும்
மன்னவனே சாரமது பலமஞ்சாகும்
தேனென தயிலமதில் விட்டேயாட்டு
தெளிவுடனமை போலேயரைத்திடாயே.

473

அரைக்கையிலே மை குருபதமான போது
அப்பனே புலத்தியனே மதியுள்ளானே
திரையதுவுமில்லாமல் குன்றுபோலே
தீர்க்கமுடனொரு குட்டாரவியில் வைத்து
முறையான கிலசமென்ற பாண்டந்தன்னில்
முறைப்படவே சில்லிட்டுச் சீலைசெய்து
குறையொன்றுந் தவறாமல் தணலில் வைக்க
கூர்மையுள்ள தயிலமது கூடாதென்னதே.

474

ஒண்ணுது தயிலமதைப் பதனம் பண்ணு
உத்தமனே யாருரைக்க உவமை கேளீர்
திண்ணன தயிலமதை யெடுத்து மைந்தா
திருத்துடனே பாச்சுதற்கு உவமை சொல்வேன்பார்
திண்மைபெறத் தயிலமதை யெடுத்துப் பாலா
தீர்க்கமுள்ள வாறுமாற்றுணிப் பொன்மேல்
உண்மைபெறத் தகடாக்கிப் பூசி மைந்தா
திண்மைபெற ரவிதன்லே காயப்போடே.

475

போட்டுமே காய்ந்தபின்னெடுத்து மைந்தா
பொங்கமுடன் கோவியது கீழ்மேலிட்டு
நீட்டமுடன் வொட்டாலிட்டு எருவடுக்கி
நீதியுடன் புடமாறியெடுத்துப் பார்க்க
வட்டமுள்ள ரவியொளி வாம் தங்கம் தங்கம்
வர்ணைபெற மாசாக்கிளாணியுந் தங்கம்
தேட்டமுள்ள பிறவியென்ற தங்கமாச்சு
தெளிவான அயந்தங்கமென்னலாமே.

476

என்னலாம் வெள்ளியது துய்யானப்பா
யெழிலான வெள்ளியது தகடதாக்கி
சொன்னபடி முன்னுரைத்த தயிலந்தன்னில்
சூட்சமுடன் தகடுதனில் லகுவாய்ப்பூசி
நின்னயமாய் லேகித்து ரவியில்வைத்து
நலம்பெறவே காவிக்குள் பொதிந்துமேதை
பன்னவே யெருவடுக்கிப் புடந்தான்றாக்கு
பகரவொண்ணாத் தங்கமது வாணிக்கட்டே. 477

எட்டானமாற்றதுவும் பொன்னேயாகும்
யெழிலானபொன்னதுவும் புடத்துக்கேளோ
மட்டான பொன்னென்றும் யாருஞ்சொல்லார்
மாநிலத்தில் புடத்துக்குறுதித் தங்கம்
கிட்டான தயிலமது காய கற்பம்
கட்டணமுடன் கொண்டவற்குக் காயசித்தி
அட்டாங்கந் திரிந்தாலும் வாதிகாணார்
அப்பனேயவன்யாருரைத்தவாக்கே. 478

வாக்கான தயிலமது குன்றியப்பா
வளம்பெறவே கொண்டவற்கு வாசியோகா
போக்கான சுவாசமது மேல் நோக்காது
பொங்குமுடன் சலமது சட்டைதன்னும்
நோக்கமுடன் சித்தர்பதம் பணிந்துமல்லோ
நோய்களும் காயசித்தி கொள்ளும் லோக்கு
ஆக்கமுடன் றுமுரைத்த தயிலகற்பம்
அப்பனேகர்மிகட்குக் காட்டொணாதே. 479

கிட்டனுல் வெகுகோடி பாவம் நேரும்
காசினியில் கர்மிகளும் பாவியுண்டு
நாட்டமுடன் மனதறிந்து பதமறிந்து
நலம்பெற வேயுபதேசம் செய்யவேண்டும்
திட்டகமாய் வெகுகோடமான பரப்பா
தாரணியில் நல்லவர் போலிருப்பாரப்பா
தேட்டமுடன் நெடுங்காலம் மனதறிந்து
தெளிவுபெற வுபதேசம் செய்யல் நன்றே. 480

நின்றன வுபதேசம் பெற்றிட்டாலும்
நினைவுடன் சன்மார்க்கநிலைகள் வேண்டும்
குன்றனைமலை போலே கோடாத்தங்கம்
குவலயத்தில் பெற்றென்ன பலனுமில்லை
தென்றிசையில் பொதிகைதன்னில் வெகுகோடிசித்தர்
தேசமெல்லாந் திரிந்துவந்து சமாதிபூண்டோர்
ஒன்றுமே கண்டதில்லை யொடுக்கமானார்
ஓகோகோ நாதாக்களைப் பார்த்தாலே. 481

விஞ்சிப் போக்கு.

தாமானமின்னமொரு கருமானங் கேள்
தகைமையுள்ள புலத்தியனே தம்பிரானே
சாமானியமான தொருகட்டுச்சொல்வேன்
சட்டமுடன்றமர்ந்து சதுருள்ளானே
நேமான மானதொரு லிங்கமப்பா
நெடிதான கட்டையெக்கும் விலங்கும்
தாமானஞ்செய்யவகை செப்பக்கேளீர்
திப்பரவாய்த் தாமுறைப் போம் கண்டுவாணே. 482

கண்டமாம் லிங்கமொருவந்தானுகும்
திருவான தாலா கடுமறையேயாகும்
திண்வானைகந் தியது வரையேயாகும்
திப்புரவாய்த் தானரைப்பாய் குமரிப்பாலால்
வணியான மெஞ்ஞகத்து போவரைத்துமைந்தா
மாற்கமுடன் லிங்கத்திற் கங்கி பூட்ட
மணியாகவே ருப்பினிலே வாட்டும் போது
மகத்தான லிங்கமது யிறுகுந்தானே. 483

இறுகுமே லிங்கமது யின்னஞ்சொல்வேன்
யெநிலான நடனுடன் சாம்பிறாணி
மறுகவே சமயைடயாம் ரண்டுங்கூட்ட
மை போலே தானரைப்பாய் மெஞ்ஞேயாகும்
குறுகவே முன் போலே லிங்கமப்பா
குறிப்புடனே லிங்கத்திற் கங்கி பூட்ட
திறுகல் போல் தீயதனில் வாட்டும் போது
தீர்க்கமென் றலிங்கமது கட்டாய்ப் போச்சே. 484

போச்சென்று விடுகாதே புண்ணியபாலா
பூமானே சீமானே புகலக் கேளீர்
தீச்சுவுடன் சாம்பிராணி பூரந்தானும்
இர்ராமல் மறுபடியுந் தானெடுப்பீர்
ஆச்சரியமான தொருலிங்கமப்பா
அப்பனே இற்றுள்யாமுருக்குப் போலாம்
மாச்சலது வாராமல் பின்னுங் கேளீர்
ஐந்தினேறனரைப்பாய் மெஞ்ஞுமோமே. 485

மெழுகான சரக்கதனை யெடுப்பாய் மைந்தா
மேன்மை பெறுமுன் போல லிங்கமப்பா
உருகாமல் கவசமது பின்னும் பூண்டு
மதிப்புடனே தீவாட்டாப் பின்னுங்கேளு
நழுகாமல் லிங்கமதைப் பதனம்பண்ணு
நிலம்பெறவே ஜெயம்பெறவே நல்ன பாலா
தொழுகவே போக்குவகையா முறைப்போம்
தோராமல் வழிமுறையாய்க் கேளுகேளே. 486

கேளப்பா லிங்கமதை யெடுத்து மைந்தா
கெவனமுடன் போக்குவகை சொல்வேனப்பா
தாளப்பா செம்பதுவை யுருக்கியல்லோ
தண்மையுடன் சிற்பரனே சாற்றக் கேளீர்
கோளப்பா தோராமல் குணமோர்லானே
குறிப்புடனே பத்துக்கு வொன்றுதானும்
பாளப்பா போகாமல் லிங்கந்தன்னை
பக்குவமாய் உருக்கு முகந்தன்னிலேயே. 487

[illegible]ய்ந்திடவே செம்பதுவு முருகியேதான்
யெழிலான லிங்கமதை வாங்கியுண்ணும்
தோய்ந்திடவே ரவியதுவும் கட்டாப் போகும்
தோராமல் கீர்யோட்டா தூதிப் போடு
வாய்ந்திடவே ரவியொழிவை யென்ன சொல்வேன்
வழிதுறையைக் காணார்கள் மட்டாமாண்பர்
பாய்ந்திடவே ரவியதுவும் மாற்றிறுகும்
பாலகனே யிவ்வேளை பலிக்குந்தானே. 488

பலிக்குமே யாருக்குமே தென்றுக்கால்
பாவிகட்கும் கிருமிகட்கும் பலிக்காதப்பா
சொலிக்குமே தவத்தோர்க்கும் புண்ணியோர்க்கும்
சொற்பெரிய மாண்பருக்கும் மன்னவர்க்கும்
ஒலிக்குமே யிவ்வேதை ரவிதானப்பா
உத்தமனே மதியதனில் பத்துக்கொன்று
கலிக்கவே தான் கொடுக்கமாற்றேறும்
காசினியில் சித்தருடமகிமைதானே.

489

தானனையிவ் வேதை அருக்கு வேதை
தாரணியில் யாருந்தான் காணப்போறார்
கோனான குருக்களுக்கும் சிவயோகிக்கும்
கொற்றவனே புலத்தியனே பலிக்கும் பாரு
தேனான சிவவேடம் பூண்டமாண்பர்
செகந்தனிலே கோடியுண்டு சொல்லப்போமோ
பானான பாவிகட்குப் பலியாதப்பா
பாரினிலே யாருமேத் தொம்பண்பாய்ப்பாரே

490

பாரப்பா யின்னமொரு அட்சிசம் சொல்வேன்
பாலகனே புலத்தியனே பண்பாய்க் கேளு
ஆரப்பா யிப்போல சொல்வாரப்பா
அப்பனே யாருமக்கு அறைத்தவண்ணம்
நேரப்பா தவ அறுதி காண வேண்டும்
நேர்மைபடயிருந்தவர்க்கு யெல்லாஞ் சித்தி
காரப்பா வெகு கோடகாலமப்பா
காத்திருந்தால் கண்காட்சி காணலாமே.

491

காணலாம் பிரணாய காலமப்பா
காதினிலே இருந்தவர்க்கு எல்லாஞ் சித்தி
பூணப்பா காய கற்பங் கொண்டபோது
புண்ணியனே காயசித்தி யேம சித்தி
தோணப்பாமா வுறுதி கொண்டுமே நான்
தொல்லுலகை சற்றேனும் மறக்க வேண்டும்
ஆரப்பா அணுவங்கள் தள்ள வேண்டும்
அப்பனே நற்பதவிக் கிடமுண்டாமே.

492.

சாரக் கட்டு

உண்டான கட்டுவகையுரைப் பேனப்பா
உற்பனமாஞ் சாரமது பலமொன்றாகும்
நின்றனதோ னமது அண்ணமப்பா
நாதரக்கள் தாமுரைத்த திட்டதனை வேறை
பன்றனதோனமதைச் சேரடுத்துப்
பட்டசுடன் சிரவுல்லியாதிப்பின்பு
குன்றனதோ னமதுக்கிரட்டிதானும்
கூறுகிறேன் மதியுப்புக் கூட்டச்சேரே

493

சேர்த்திக்கவே சரியைடையாம் களியுப்பாகும்
தெரிமல் பதராமலொன்றாய்க் கூட்டு
பூத்திறைவண் கருவாலாட்டியாட்டு
புகழ்பெற வேரவிதன்னே காயப் போடு
கீர்த்திபெறக் கோழியது புடமேயாகும்
திரலையுடன்றன் போடு மேன்றுமுறையாகும்
தீர்த்தமென்ற சலமதுவும் சேர்த்தப்பா
திறமையுள்ள சாரமதுக் கங்கியாச்சே.

494

ஆச்சப்பா சாரமதையெடுத்துக்கொண்டு
அப்பனே வெண்கருவாலரைத்துமுன்போல்
நீச்சப்பா தானகல வெடுகிழரைத்து
நீதியுடன் சாரத்துக் கங்கிகொண்டு
மேச்சடங்கப் புடமதுக்குச் சீலியேடு
மேயற்றியுடன் அண்ணும் புச்சீலியாகும்
மாச்சலது தோராமல் மண்ணுகேரு
மதிப்புடனே கோழியென்றபுடத்தான் போடே
495

போடவே சாரமது கட்டரப் போகும்
பொங்குமுடன் றனையெடுத்துப் புகலக்கேளீர்
நீடப்பா முன்சொன்ன சாரமப்பா
நேடாதான காரமென்ன அண்ணமாச்சு
ஆடப்பா கருஞ்சாரம் தூரிசிக்கப்பா
அப்பனே கவசமது பூண்டுமே நான்
சாடப்பா ரவிதனிலே வைத்துப்பின்பு
சாங்கமுடன் சீலியது செய்திடாயே.
496

செய்யவே புடமதுவுங் கோழியாகும்
செப்பரிய அண்ணமதுயென்ன சொல்வேன்
உய்யவே கவசமது அடைத்துப்பார்க்க
உற்பனமாஞ் சாரமதுக் கங்கிநீக்கு
பையவே நீக்கியபின் துருசுதானும்
பளிங்கான அடன்போலிருக்கிற்கும்
மெய்யான தூரிசியது வண்டக்காற்றல்
மேன்மைபெற நீற்றியது அண்ணமாச்சே.
497

ஆச்சப்பா சொன்னமது யென்னசொல்வேன்
அப்பனே ஆதியென்ற மெய்பூவாச்சு
மேச்சடத்தித் துரியது நிறலாச்சு
மேதண்டவிசமது தான் திருகக்கேறி
மாச்சலது தோரமல் துருசதானும்
மேத்தான வாதியென்ற குருவுமாச்சு
நீச்சதுதான் வாராத குருவுமாச்சு
நீதியுள்ள மாண்பர்களுக்காதியப்பே 498

உப்பான குருபரம்பமிது வேயாச்சு
உலகுதனில் முழுமக்கள் காண்பாருண்டோ
அப்பான வுப்பதுவால் சிதமப்பா
அப்பனே வாடுகண்டபுலிதானப்பா
செப்பரிய சூதனென்ற ராசனப்பா
செத்துமே மடந்தல்லோ அண்ணும்பானுன்
செப்பரிய சூதமென்ற அண்ணந்தன்னை
சீகோகோ நாதாக்கள் மறைத்தார்பாரே. 499

மறைத்தாரே பதினெண் பேர் நாற்பத்தெண் பேர்
மாண்டர்கள் காணாமல் மேடறைவைத்தார்
நிறைத்தவொருள் சூதவித்தை வுலகிலப்பா
நேர்மையுடன் காணாமல் நுணுக்கங்கூறார்
குறைத்தவொருவாகவே தான் கூறிவைத்தார்
குவலயத்தில் சித்தர் பலநூல்களெல்லாம்
திரைத்துமே கடத்துச் இக்கருத்து
திறப்புடனேயா முரைத்தோம் பண்பாய்த்தானே. 500

பண்பான புலத்தியனே மச்சகேந்திரா
பாலகனே ஆதமென்ற அண்ணாத்தனே
திண்மையுடன் ரவிதனிலே நூற்றுக் கொண்டு
தியவுடனே தாக்கிப்பார் மாற்றே பத்து
வண்மையுடனதியென்ற சேடன்றானும்
வாயாது பகரவே முடியாதப்பா
உண்மையுடன் மானிடர்கள் பிழைக்கவென்று
உண்மையுடன் தாமுரைத்தோம் உண்மைதானே

501

தானான அண்ணமதையெடுத்துமைந்தா
தாக்கிடவே மதிதனிலே நூற்றுக் கொண்டு
கோனான குருபற்பமென்ன சொல்வேன்
கொற்றவனே மாற்றீந் தொராண்ணது
தேனான மனோன்மணியாள் வீற்றிருக்கும்
தெளிவான தங்கமது பசுமை மெத்த
மானான தங்கமது பிறவித்தங்கம்
மகத்தான ரோகர்கள் தங்கமாச்சே.

502.

தங்கமாம் அண்ணமதுயென்ன சொல்வேன்
தாரணியிலாருந்தான் காணமாட்டார்
புங்கசித்தியெட்டுரிய தங்கமாச்ச
பூதலத்திலாருந்தான் செய்யமாட்டார்
வங்கமென்ற புடத்துக்கு வசையாத்தங்கம்
மானிடர்கள் பிழைப்பதற்கு அருளித்தங்கம்
இங்கமென்றதுருசியது கொண்டதாலே
இற்பரனே ரசமது ராசாளியாச்சே.

503

ஆச்சப்பா ரசமென்ற சுண்ணாந்தன்னை
அப்பனே மண்டலந்தான் கொண்டாயானால்
மாச்சலது வாராது ஆரசச்சுண்ணம்
மண்டலத்தில் கொண்டவர்க்குக் காயசித்தி
சாச்சவுடன் பத்தியமோ பாலோடன்னம்
பாரினிலே கொண்டவர்க்குப் பலனுண்டாகும்
ஆச்சரியமான தொரு காயகற்பம்
அன்புடனே கொண்டவர் காத்தெந்தானே.

504

காணவே புலத்தியனே தம்பிரானே
தண்மையுள்ள புத்திரனே தகைமையோனே
கோனவனே காயாதி கொண்டபேர்கள்
குவலயத்தில் கோடவரையிருப்பார் கண்டீர்
மானவனே ரசாதி சுண்ணமப்பா
மகிமையது கூறுதற்கியாராலாகும்
பானமது கொண்டாலும் சித்தமப்பா
பகருதற்குப் பத்தியமில்லை தானே.

505

குருநாதபற்பம்

இல்லையா மின்னமொருமார்க்கஞ்சொல்வேன்
எழிலான பற்பமது நாதபற்பம்
தொல்லையது தேற்றுமிந்தப்பற்பம்
தோற்றாத பற்பமது துலிவுமற்ற
வெல்லவே கல்லதுதான் மெக்கல்லாகும்
வேதாந்தக் கல்லதுதான் பென்றேயாகும்
புல்லவே கல்நாற்றம் கல் மருந்தான்
புகழான சலாசத்துயென்னலாமே.

506

என்னவே யாறுவகைச் செயநீர் தன்னில்
யெழிலாகத் தானரைப் பாயாறு சாமம்
முன்னேவே தானரைப் பாய் மை போலாக
மிக்கான மெழுகது போலாட்டு மைந்தா
பன்னவே பில் உயது தட்டா மைந்தா
பாலகனே ரவிதனிலே காயவைத்து
சொன்னபடா யோட்டா விட்டுடுவேடா
சுருதி பொருக் கோழியென்று புடந்தான் போடே
507

புடமதுதான் றானபின் னெடுத்துப் பார்க்கப்
பொங்கிடுமே டன் சுண்ணமது யென்ன சொல்வேன்
திடமதுவும் மிகவுண்டு யிந்தச் சுண்ணம்
தீராத ரோகமெல்லாந் தீர்ந்து போகும்
சடமதுவும் இறுகியல்லோ திடமுண்டாகும்
சாற்றுதற்குமே கமற் கிடமுமில் உ
அடலான மசுண்ணமது பிரம்மகற்பம்
ஆற்றுமுடையாது செய்யாரன்றே.
508

செய்யவே முடையாது யிந்த்ரபாகம்
செய்தாலும் முறைபாடு செய்யொண்ணாது
உய்யவே பற்பமது வெண்ணீ தன்னில்
உத்தமனே மண்டலந்தான் கொண்டாயானல்
வையவே தேகமது கற்றூணாகும்
நாட்டதனிலே பண்டிதர்கள் காணமாட்டார்
செய்தாலும் வழிபாடு முறைபாடெல்லாம்
செப்பிடவே செய்தவற்குச் சித்தியாமே.
509

சித்தியாம் குருநாதபந்தமப்பா
சிற்பரனைச் சகத்தலத்தில் யார் தான் செய்வார்
பத்தியுடன் குருமொழியைக் கேட்டபேரும்
பண்பாகப் பலநூலையறிந்தபேரும்
நித்தியமாய்க் குருதனையே பணிந்தபேரும்
சோதி முகம் காத்திருந்து கண்டபேரும்
முத்தியது வேண்டுமென்று நினைத்தபேரும்
மேதலகில் காண்பதுதானுண்மைபாரே
510

பாரப்பா குருநாதபந்தத்தாலே
பாரினிலே வைகுகோடி மாண்பரப்பா
சீரப்பா சைபாகந் செய்பாகந்தான்
தெரியாமல் கெட்டழிந்தார் கோடா கோடி
ஆரப்பா அருமையாயறிந்தோர் மாண்பர்
அப்பனே கண்டவர்கள் விள்ளமாட்டார்
நேரப்பா துறைகோடி தொந்திங் கோடி
நேர்மையுடன் செய்வதற்குச் சித்தியாமே.
511

சிவலிங்கபந்தம்

ஆமப்பா யின்னமொரு மார்க்கஞ் சொல்வேன்
அப்பனே புலத்தியனே மச்சகேந்திரா
நாமப்பா சொன்னபடி சிவலிங்கமப்பா
நலமான சங்குருந்தக் கல்தானுகும்
போமப்பா முன்சொன்ன குருநாதிந்தான்
பொலிவான வாறுவகைச் செயநீர் தன்னால்
சீராமப்பா கல்வமதிலிட்டு மைந்தா
சீர்பாகவரைத்திட வேமெழுகுமாமே.
512.

28.1.86.

மெருகான மைசிகுதுவை யெடுத்துப்பாலா
மென்மையுடன் குருந்திக்கல்லங் கிழுட்டு
தெருகாமல் சிலையது வுருக்கச் செய்து
உத்தமனே கைசபுடத்தில் போட்டாயானால்
பருவுடனே வெந்ததுவும் தீறியல்லோ
பாலகனே அன்னமது வாகதிற்கும்
கொழுமையாம் பற்பமது கடசொன்னது
கொற்றவனே நாதாக்கள் வெளிகிரமே.

513

வெளியாம் குருந்திக் கல் அன்னமப்பா
வேதாந்தித் தாயினது வருளினாலே
ஆலிபோல் கண்டறி தெனதிக் கல்லாம்
அப்பனே காயாதிகற்பக் கல்லாம்
சாலி மெருடம் வழிதடங்கள் மலைகள் மீது
திப்பாது தானிருக்கும் குருந்திக்கல்லாம்
வெளியெனுங் கடல்தனிலும் விளையுங் கல்லாம்
வேதாந்தத் தாயெனக்குக் கொடுத்தகல்லே.

514

கில்லான அன்னமது கிழசொன்னது
காசினியின் நாதாக்கள் கூறமாட்டார்
உல்லான அன்னமதைக் குன்றிதானும்
வகுப்புடனே தெளதிலே கொண்டாயானால்
பல்லான பல்லதுவும் முருக்கிக்காட்டும்
பாலகனே திரேகமது கற்றாணுகும்
சொல்லான வாசியது மேல் நோக்காது
அருளிபெற லோகமதில் வாழலாமே.

515

வாழலாம் வெகு கோடி காலமப்பா
வண்மை பெற ஜெகந்தனிலே யிருக்கலாகும்
ஆளலாம் சாகரமுந் தீர்த்தலாகும்
அப்பனே காயாதியிதுவேயாகும்
மேகலாம் சமாதிமுகம் கொள்ளலாகும்
மிக்கான யோகத்துக் குறுதியாகும்
தாழலாமிச் சுண்ணமதிறமார்க்கும்
தப்பாது இருபத்தம் தன்மைபாரே 516

செயகண்ட மாத்திரை

பாரப்பா செயகண்டமார்க்கும் சொல்வேன்
பண்மை பெறப் புலத்தியனே பண்பாய்க் கேளு
ஆரப்பா செயகண்ட மாத்திரை தானப்பா
அப்பனே யாமுறைப் போமற்றுமட்டும்
சேரப்பா லிங்கமது பலமேயாகும்
செப்பரிய பூரமது பலமேயாகும்
தேரப்பா வீரமது பலமேயாகும்
தேர்ந்தெடுத்த கெந்தியது பலமொன்றாமே. 517

ஒன்றான பாசாணம் பலமொன்றாகும்
உத்தமனே தெவரியது பலமொன்றாகும்
குன்றான சூதமது பலமொன்றாகும்
குருபரனே தாளகமும் பலமொன்றாகும்
வென்றிடவே சரக்கெல்லாங் கல்வமிட்டு
வெற்றிபெற வாறுவகைச் செயநீர் தன்னால்
தென்றிசையிலவனியாருரைத்த வண்ணம்
தேர்ந்தெடுத்த கெந்தியது பலமொன்றாமே. 518

28.1.86.

முறையான செயநீரை விட்டு ஆட்டு
முக்கியமாய் எண் சாமமரைத்துப்போது
குறையொன்று நேராமல் மிளகு நீரால்
குறிப்புடனே தாமரைப்பாய் மெழுகுபோலே
திறைநீக்கி ரவிதன்லே காயவைத்து
தீர்க்கமுடன் றாணுருட்டத்திறமாயப்பா
புறைபோகாவண்ண முடன் குன்றிபோலாம்
புட்கரனே தாணுருட்டரவியில் வையே.

519

வைத்துமே சீசாவில் பதனம் பண்ணு
வளமைபெற மாத்திரையையுண்பதற்கு
பொய்த்துமே போகாமல் வாசியோகம்
பொங்கமுடன் செய்துகொண்டு வருப்பானங்கொள்
முத்தான தேனதிலே மண்டலந்தான்
முயற்சிபெறக் கொண்டவர்க்குக் காயசித்தி
சித்தானதிரேகமது யிறுகியல்லோ
சாகரமுங் காண்பதற்கு யேதுவாச்சே.

520

ஏதுவாம் வாசியது மேல்நோக்காது
யெழிலான சாதகத்துக்கிடமுண்டாகும்
போதுமே மண்டலந்தான் கொண்டபோது
பொங்கமுடன் சமாதிக்கு வுறுதியாவாம்
தீதுவனுக்கிடமில்லை துய்யபாலா
திப்புரவாய் மாய்கையது தள்ள வேண்டும்
சாதூரியமாய்த் திரியவாயுவாகா
சட்டமுடன் குள்தனிலேயிருந்திடாயே.

521

இருளாதனிலிருந்து மேயிறைவாதிகேள்
யெழிலுடனே கிற்பமது கொள்ளுங்காலம்
பொருளான பொருளதுதானே தென்றக்கால்
பொற்பொருளாம் சாதகமாம் சமாதியோகம்
தெருளாகற்றி ரேசகபூரகத்தைத்தானும்
தேற்றமுடன் கிலைவதுதான் மிகவேறுமல்
அருளானவருளாதனிமக வேகாளா
அப்பனே சின்மயத்தைத் தேடக்கொள்ளே. ௫௨௨.

சொல்லாவே சின்மயத்தை அன்னிப்பாரு
குறிப்புடனே சதாசிவத்தின் களையே தோன்றும்
இல்லாவே சிதாபாசக்கிரியகற்றி
இத்தகனே வாசிரக்கி நடத்தலாக்கும்
உள்ளபடி தவருதுயிந்தமார்க்கம்
உத்தமனே நாதக்கள் நண்ணும் மார்க்கம்
எல்லாவும் பிசகாது புலத்தியா கேள்
யெழிலானவசுவன்யாத் தேவர் வாக்கே. ௫௨௩

உரக்கான வாக்கதுவும் பிசகாவண்ணம்
உவமைபெற நடந்தவற்கு யெல்லாஞ்சித்தி
நோக்கான நோக்கதுவுமறிய வேண்டும்
நொடக்குள்ளே தற்பரத்தையடைய வேண்டும்
தேக்காமல் சதாகாலம் நிட்டைவேண்டும்
தெளிந்தாலே சதாசிவத்தைக் காணலாகும்
மூக்காலே வாசியைத்தான் நிறுத்தல் வேண்டும்
மெய்கண்டரகசியத்தைப் பார்க்கநன்றே. ௫௨௪

நன்றான யின்னமொரு நமஞ் சொல்வேன்
நாதாக்கள் தேசமதிலாருங் கூத்து
குன்றான மலை போலே குளிகையப்பா
கூறுகிறேன் புலத்தியனே புண்ணியபாலா
தென்றிசையிலவன் யாரெந்தனுக்கு
செப்பின தோர் குளிகையது மகிமை சொல்வேன்
வென்றிடவே சித்தர்கள் முனிசைவோர் தாமும்
விண்டதில் உயிர் வேறை கருவல்லாமே.

525

திருவான குளிகையது சூதாசன்
காசினியில் விண்டவர்கள் ஆருமில்லை
திருவான சூதமது பலந்தானும்
திரக்கான துரிசியது பலம் ரெண்டாகும்
திருவான குயப்பாண்டம் தன்னிலப்பா
கொற்றவனே பொடபண்ணிச் சூதம் விட்டு
பருவமுடன் தற்காலமாற விட்டு
பக்குவமாய்ச் சீலமதை யிறுத்திடாயே.

526

இறுத்துவே வடா கொண்டு சூதந்தன்னை
வெயிலில் பெரு வேதிதனில் வடாதான் கொண்டு
பொறுத்துமே யின்னுமொருக் காலுமப்பா
பொங்கமுடன் துருசதனைத் தூவி
நிறுத்துமே சூதமதை நிறுத்துப் போடு
நீதியுடன்றான் பிழிந்து வெண்கலந்தன்னை
வெறுத்துமே வெண்ணெய் திரளையுடுத்துப்பாலா
வேகமுடன் மத்தக்காய்க் குள்ளே வையே.

527

28.1.86.

வைத்துமே புடமதுதான் பத்தேயாகும்
மகத்தான ரசமதுவுமிறுக்கிக்கூடும்
பொய்த்துமே போகாது ரசமாவென்னி
பொலிவான கட்டையதுவுருண்டைபோலாம்
நைத்துமே மண்மறைவில் புடந்தான் தீரு.
நாதாந்த ரசமதுவும் மணிபோலாகும்
சைத்துமே மேலிவகையா முறைப் போம்
கருத்துடனே புலத்தியனே கேட்டிடாயே.
528

கேட்கவென்றால் மேலியதுவேதென்றுக்கால்
அட்டையான நற்சங்கை மேலியப்பா
நாட்டமுடன் விளாங்காயின் பிரமாணந்தான்
நலமுடனே தானரைப்பாய் நண்புள்ளானே
தேட்டமுடன் மேலியதுக்குள்ளேயப்பா
தெளிவான சின்னத்தின்லவங்கப்பட்டை
திட்டமாய்ப் பலமதுவும் நிறுத்துமல்லோ
தியாபரனே கவசமது செய்திடாயே.
529

செய்யவே ரசவுண்டைதன்னுக்கப்பா
செம்மையுடன் கவசமதுக்கங்கிபூட்ட
நைதருவண்ணமது சீலைசெய்து
காவலனே ரவிதன்லே காயவைத்து
நையவே புடமதுவுங் கோடியாக
நாவலனே போட்டுப்பார் யிறுகிநிற்கும்
ஆமெய்மையுடன் ரசமதுவும் மணிபோலாகும்
மென்மையுள்ளா குளிகையென்று சொல்லலாமே
530

28.1.86

செப்பலாம் ரசமதற் கின்னஞ் சொல்வேன்
செயிப்பான மெழுகையாம் கரும்பச்சையாகும்
ஒப்பமுடன் மெழுகினாலங் கிபூட்ட
உத்தமனே தசபுடமும் போட்டாயானால்
திப்பிதங்கா நேர்ந்து இரசமப்பா
திப்பாது கல்மணியாங் கட்டுசேயாகும்
சாப்படியும் இரசமதும் மணியேயாகும்
செகிலாகக் காயாதி குளிகையாச்சே.
531

ஆச்சப்பா குளிகைதனை யெடுத்துவைத்தா
(பண) → அப்பனே பசியின்றன் மேலத்தாலே
நீச்சப்பா மெழுகது விசமேயாகும்
நீட்கிளாங் கமானதொரு சாற்றையப்பா
போச்சப்பா சாறென்று விடுகவேண்டாம்
பொலிவான சாறதனைச் சுருக்கித்தாக்கி
வீச்சுடன் ரசமது வீறடங்கி
விண்ணுலகில் காயாதி கற்பமாமே.
532.

கற்பமாங் குளிகையது மணியேயாகும்
காசினியில் யாருந்தான் காணப்போறார்
அற்பமென்று நினையாதே அன்புள்ளோனே
அகிலமதில் நாதாக்களோடுங் கீட்டது
சொற்பெரிய குளிகையது யென்ன சொல்வேன்
தோற்றசிவ குளிகையென்னலாகும்
பற்பமது சிவகுளிகை [illegible] தற் கொவ்வாது
காசினியில் விதியுள்ளோன் காண்பான் தானே.
533

காண்பானே சிலமாண்பன் காண்பானப்பா
கண்டவர்கள் யாரேனும் காண்பதில்லை.
வீண்பான மாண்டார்கள் காண்பதுண்டோ
விட்டகுறையிருந்தவர்க்கு யெல்லாஞ்சித்தி
ஆண்மையாம் குளிகையது யார்தான் செய்வார்
அப்பனே கடந்தசித்து செய்வாரப்பா
பூண்பான குளிகையது யோகஞ்சொல்வேன்
பொலிவான சிவயோகிக் குறுதிபாரே
534

பாரப்பா சிவயோகஞ்செய்யும்போது
பாங்குடனே குளிகைதனை வாயில்விட்டு
சீரப்பா சின்மயத்தை நினைத்துக்கொண்டு
இறுப்புடனே வாயில்விட்டு செபிக்கும்போது
நேரப்பா வாசியது மேல்நோக்கிநீது
நெடிதான கும்பகத்தையறியலாகும்
ஆரப்பா வாறுதலங் காணலாகும்
அப்பனே மனோன்மணியைக் காண்பார் தாமே
535

காணவென்றால் புராதனமாம் பொருளுங்காண்பார்
காயாதி குளிகையினால் யெல்லாஞ்சித்தி
பூணலாம் குளிகையது வலுவினாலே
புங்கசித்தியெட்டுமது கொள்ளலாகும்
வேணபடி யோகத்தை திறுத்தியேற
வேண்டியதோர் கருமானமிதனாலாகும்
ஆணவங்கள் மிஞ்சாமல் யோகங்கொள்வீர்
அப்பனே சதாநிட்டை கொள்வீர் தாமே.
536

கொள்ளவே புலத்தியனே மச்சகேந்திரா
கோவேந்தேயுந் தமக்குக் கூறும் வண்ணம்
அள்ளாவும் பிசகாது பயிர்க்குப் பாகம்
என்மகனே புண்ணியனே யெந்தின்மாரா
உள்ளபடி பலநூலுங் கண்டாராய்ந்து
ஓகோகோ நாதாக்கள் கூறு வண்ணம்
தெள்ளமிர்தமான தொருகுமானத்தை
தெளிவுடனே யாமுரைப் போம் தெளிவுபாரே.

537

தெளிவான பூநாகம் பலம் பத்தாகும்
தேற்றமுடன் றனையெடுப்பாய் குணமுள்ளானே
ஒளிவானநற் பசுவின் பாலிலப்பா
உறுதியுடன்றான் கலந்து ஊறப் போடு.
கிளியான மண்ணதனைக் கக்கிப் போடும்
கிவலனே நாவலனே கிருதக்கோனே
வெளியான ரவிதனிலே காயவைத்து
வெட்கமுடன் றனையெடுப்பாய் மன்னு கேளே.

538

மன்னான மன்னவனே மதிப்புள்ளாரே
மகதேவர் தாகளெல்லாம் மதிக்குங் கோவே
தென்பொதிகை யசுவண்யாந் தேவர்தாமும்
சேர்ந்தெடுத்து சூளாளா தேர் வேந்தே கேள்
இன்னவனுக் கொப்பானிடர்கள் பாதா
இன்மணியே புலத்தியனே கவிராசேந்திரா
பொன்னிமிகத்தான் மறந்த புண்ணிய பூபா
போக்குடனே பூநாகங் கூறுவேனே.

539

கூறு வேண்டு நாகந் தன்னை யெடுத்து
குறிப்புடன் பொடியாகப் பாகமாக்கி
மாறுபடா மண்ணீக்கிப் பொடியை யப்பா
மார்க்கமுடன் வெள்ளியந் தன்னிலப்பா
வீறுடனே உருக்கிக் கிராசமீவாய்
விந்தகனே வெள்ளியம் நிறையுண்ணும்
ஆறுதலம் நிறையது வாங்கியுண்டு
அப்பனே வெட்டை முகமாகுந் தானே.

540

வெட்டையாம் நிறையது உண்டுவாங்கி
வேகான காரமது மிகவேயூற்
திட்டமுள்ள வங்கமது சமயோகி
திறமையுள்ள லோகம் போல் சொலிக்கும் வண்ணம்
சிட்டமுள்ள தாம்பிரமும் பொடியேயாகி
ராங்கமுடன் வெண்ணிறமாயிருக்கும் பாரு
அட்டதிசை சித்தர் முனிவர்களும் நகைச்
அவன்தனில் கொண்டாடும் செம்புமாச்சே.

541

செம்பான செம்பதுவும் வெள்ளிச் செம்பாம்
செகந்தனிலே மிகமே முதுகாணமட்டார்
செம்பான ரவிச்செம் பேதவாச் செம்பாம்
செகந்தனிலே நாதாக்கள் கண்ட செம்பு
செம்பான செம்பதுவும் குருதாணுகும்
தேசத்தில் காமிகட்கு வாயாதப்பா
செம்பான செம்பதுவும் ஆசச்செம்பாகும்
செப்புதற்கு நாவில்லை பாவில்லை தானே.

542

பாவான செம்பதனப் பதனம் பண்ணு
பாலகனே அண்டத்தினாலாவதாக
மேவவே பரணியது போலே மைந்தா
மேன்மை பெற இமியொன்று துவாரமிட்டு
தாவான ஈரசமென்ற ரசந்தன்னை
திண்மை பெறப் பரணியிலடைக்கட்டு
காவலென்ற மேற்பரணி கொண்டு மேட
கருத்துறவே சாதமதிலவித்திடாயே

543

சாதமென்ற அவித்ததையே திறந்து பார்க்க
சட்டமுடன் ரசமதுவுருகிப் போகும்
நீதமுடன் வெண்ணையது போலேயாகும்
நிட்களங் கமானதொரு ரசத்தினுண்மை
வேதமென்ற சாத்திரத்தின் படியாராய்ந்து
வித்தகனே ரசமதைத் தானெடுத்துப் பாலா
தீதமதைத் தானுருக்க மேசை சொல்வேன்
திருத்தமுள்ள காந்தமென்ற மேசைதாக்கே.

544

தாக்கியே வெண்ணெய்தனை யுருக்கிப் பார்க்க
தாய்யானும் வெள்ளியதுயென்ன சொல்வேன்
ஆக்கமுடன் வெள்ளியது முலாமேயாகும்
அப்பனே நாதாக்கள் செய்யும் வெள்ளி
நோக்கமுடனிவ் வெள்ளி சிவமேயாகும்
நாடதக்குள்ளோ சக்தி சிவம் காணலாகும்
பாக்கியங்கள் மிகவுண்டாமிக்கப் போக்குப்
பலித்தேன் சிவவேடம்பூண்டோர்க்காச்சே.

545

ஆச்சப்பாயின்னமொருகருமானங்கேள்
அப்பனேயகவுனியார் சொன்னதிது
காச்சலென்றவெட்டையப்பு வைத்தாங்காச்சல்
கனபட்டனேறனைடுப்பாய் கும்பியப்பா
மூச்சடங்கவாறுவகைச் செய்தீர் தன்னால்
முக்கியமாய் வாட்டாடவே கம்பிகட்டும்
மாச்சலது வாராது கம்பியப்பு
மன்னவனேவாட்டாடவே கட்டப் போச்சே.
546

கிட்டான நேரம் வெட்டையப்புத் தானெடுத்து
காவலனே தங்கமது மேலே சுற்றி
திட்டமுடன் பத்துக் கொன்று தங்கம்
தீர்க்கமுடன்றான் சுற்றிப் பரியின் மேலே
சட்டமுடன் திராவகத்தில் வாட்டத்திட
சார்பான பரியதுவை அண்ணுமப்பு
நட்டமது வாராது தெரியப்பப்பா
நேயகனே வுடம் கொண்டுயிறுக்கிறானே.
547

தானென மதியப்பு யிறுகியல்லோ
திகைமையுடன் கண்சிவந்து பொறுமி நீரும்
கோணென புலத்தியனே பூபா கேண்மோ
சொற்றவனே செங்கதிரோன் செந்தூரந்தான்
மானென செந்தூரமென்ன சொல்வேன்
மகத்தான வெட்டையப்புச் செந்தூரத்தை
பானென பரண்யிலேவைதனம் பண்ணு
பாலகனே பாச்சுதற்கு வகை சொல்வேனே.
548

சொல்லவே மதிதன் லேபத்துக் கொண்டு
அருதி பெறத் தாணுருக்கி யீவாயப்பா
வெல்லவே வுருக்குமுகந் தன்னிலேயே
வேகமுடன் மாற்றதுவு மென்ன சொல்வேன்
புல்லவே மாற்றதுவு மெட்டேயாகும்
பூபாலா யிவ்வேதை காரமைத்த
அல்லவே புடமிட்டா லாணிக்கப்பா
அப்பனே மாற்றதுவும் பத்தேயாச்சே.

549

பத்தான மாற்றதுவு மென்ன சொல்வேன்
பண்புள்ள புலத்தியனே பாலகிட்டா
முத்தான தங்கமது பிறவித் தங்கம்
முயற்சியுள்ள தங்கமது பசுமைத் தங்கம்
சித்தான தங்கமது சாற்றெண்ணாது
சித்தரான வேதை முகந்துறைகளோடும்
வெற்றியுள்ள தங்கமது புகலொண்ணாது
வேதாந்தத் தாயுரைத்த வேதையாமே.

550

ஆமே தானிவ் வேதை யின்னஞ் சொல்வோம்
அப்பனே ரவிதன் லேபத்துக் கொண்டு
நாமே தானுரைத்தபடி அருக்குமுகந் தன்னில்
நாயகனே தான் கொடுக்க மாற்றே பத்து
போமே தான் காவிக்குழிப்புக் கேளோ
பொங்கமுடன் செம்பொன்னாய்ச் செப்பலாகும்
தாமே தானுரைத்தபடி பலயோகக் கெல்லாம்
திண்மையுடன் பொய்யாகு மிதுமெய்யாமே.

551

கூறவே புலத்தியனே புண்ணியவானே
குவலயத்தில் சித்துமுனி ரிடிகள் தேவர்
தேறவே பலநூல்கள் கண்டாராய்ந்து
தேற்றமுடன் சொன்னதொரு பாடுமில்லை
மீறவேய அவனியார் தேவர்பாதம்
மிக்கவேயான் பணிந்து புகலுற்றேன்
ஆறவே சயரோக குலாந்தகன்றன்
அன்புடனேயா முறைப்போம் அன்புள்ளானே.
நூலின் (552 நம்பர் கல்கி.) 553

அன்பான தாளகமும் பலந்தானொன்று
அப்பனே தானெடுத்துச் செப்பக் கேளீர்
உன்பான சுண்ணும்புக் குட்டையொதிந்து
வாமுடனே காடியது மிகவே பெய்து
அன்னமதை மேலுமதுக் கிழிட்டு
அந்தரனே காடதன்னுள் வேகவைத்து
இன்னமது நேர்மல் மேன்றுமுறையப்பா
சித்தகனே திட்டையது செய்திடாயே.
554

செய்யவே திட்டையது வானபின்பு
செயலான தாளகத்தை யெடுத்துப் பாலா
உய்யவே கண்டங்கத்தரி தானப்பா
உத்தமனே சாற் நாழி சுருக்கித் தாக்கு
மெய்மையாய்ச் சுருக்கதுந் தீர்ந்தபின்பு
மேன்மையுடன் மேற்கவசம் செய்பு வேண்பார்
திவ்ய நல்ல சுக்காணம் சுண்ணமப்பா
திப்புரவாய்க் கருவிட்டு அட்டடாயே.
555

ஆட்டமேமை முகுபதமானபின்பு
அப்பனே தாரகத்துக் கங்கிபூட்ட
தாட்டிகமாய் ரவிதனிலே காய வைத்து
தற்பரனே கோழியென்ற புடந்தான் போடு
நாட்டமுடன் புடமாறியெடுத்துப்பாரு
நாயகனே வெந்துமது அண்ணமாகும்
நாட்டமுடன் பற்பமது பதனம் பண்ணு
நேமகனே அனுப்பான மறிந்துகொள்ளே.
556

கொள்ளாவே வெண்ணெயது தேனுமாகும்
கொப்பெனவே சீரணமாமே தென்றக்கால்
தெள்ளாமிர்தமானதொரு தாளிசபத்திரி
தெளிவான சூரணத்தைச் செய்துகொண்டு
மெள்ளவே இனியது சரியாய்க் கூட்ட
மென்மையுடன்றான் கொடுக்கவனுப்பானத்தால்
அள்ளியதோர் சிலகாசமீளைகாசம்
அப்பனே அடங்கி விட்டோடுந்தானே.
557

தானான ரோகமது மந்தாரகாசம்
தாக்கான சுவாசமொடு வெள்ளோக்காளம்
மானான மகோதரமும் பாண்டுரோகம்
மகத்தான விற்புருதி காசபேதி
தேனான கழிச்சலது சலநீர்ப்பாச்சல்
செரியாத மந்தமொடு விஷநீர்க்கோவை
பானான பலரோகசில் விடங்கள்
பறக்குமடா சடலம் விட்டுச் சண்ணுந்தானே.
558

30.1.86.

சுண்ணுமே பத்தியத்தானிதற் கோயிலிலே.
சாங்கமுடன் கருகுடனேயெண்ணெயாகா
குண்ணுமே நோயனைத்தும் குடலேபோகும்
குவலயத்தில் சித்தர் செய்யும் சுண்ணமப்பா
புண்ணியங்கள் செய்தவர்க்கு யிந்தபாகம்
புங்கவனே சித்தியடா மற்றோர்க்குண்டோ
எண்ணரிய நற்பொருளோ யார்க்குங்கிட்டும்
யேகாந்தமானதொரு சுண்ணமாச்சே. 559

மகாலிங்கதாரக்கு.

ஆச்சப்பா யின்னமொரு கருமானங்கேள்
அப்பனே புலத்தியனே மச்சகேந்திரா
பாச்சவே லிங்கமொரு பலந்தான் வாங்கி
பாலகனே முலைப்பாலால் சுத்திசெய்து
காச்சலென்ற வைத்தாங்கால் மதிதானப்பா
காவலனே பலமதுவாய்ச் செப்பக்கேளு
மாச்சலது வாராது தினம் சேர்த்து
மன்னவனே யாறுவகை நீராலாட்டே. 560

ஆட்டவே லிங்கமதற் கங்கிகொண்டு
அலவுடனே மெழுகுபதமரைத்துப் பின்பு
தாட்டகமாம் சீலையது வலுவதாக்கி
தயாபரனே மண்மறைவிற் புடந்தான் போடு
நீட்டமுடன் புடமாற வெடுத்துப்பாரு
நீயுடனே மறுபடியுமங்கிகொண்டு
வாட்டமுடன் பின்னுமந்த முறை தப்பாமல்
மயங்காமல் புடமதுவும் போட்டிடாயே 561

புடமான லிங்கமதைத் தானெடுத்து
புடக்கரனே புலத்தியனே பின்னுங் கேளாய்
திடமான லிங்கமதுக் கிரட்டக்கப்பா
தீர்க்கமுடன் அயப்பொடியாம் பலமதாக
மடமுடனே ரவியதுவுஞ் சமனதாக
மார்க்கமுடன் கருவின் பால்விட்டே யாட்டு
படமுடனே லிங்கமதற் கவ்விக்கொண்டு
பதறாமல் ரவிதனிலே காயப்போடே.
562.

காய்ந்தபத்தந் தனையெடுத்துக் கருவாளனே
கருத்துடனே பூப்புடத்தில் போடக்கேளீர்
ஆய்ந்ததுமே மணலதனைப் பதந்தானிட்டு
அளவுகொண்டு தீமேட்டப் புடந்தான் கொடு
வாய்ந்தபுடமாறிய பின்பெடுத்துப் பார்க்க
மன்னவனே லிங்கமது யிறுகிக்கட்டும்
சாய்ந்தபொருளா திலக்கந் தம்பிரானே
சாங்கமுடன் றனையெடுத்துப் பதனம் பண்ணே.
563

பண்ணியே லிங்கமதைப் பாச்சிக் கேளீர்
பாலகனே கண்மணியே பகருவேன் யான்
வண்ணமுடன் செம்புதனைத் தானெடுப்பாய்
வளம்பெறவே வாறுவகைச் செயநீர் தன்னால்
எண்ணமுடன் றனுருக்கிச் சாய்ப்பாயப்பா
ஏழிலான ரவியொளியை யென்னசொல்வேன்
திண்ணமுடன் செம்புதனை யெடுப்பாய் மைந்தா
நிலம்பெறவே பாச்சதற்குவகை சொல்வேனே.
564

சொல்வேனே மதிதானும்பத்துக் கொன்று.
திப்புரவாய்த் தாமுறுக்கிப் பத்துக் கொன்று
செல்லவே கொடுத்துப் பார் மாற்றுறும்
வேதாந்தத் தாய் கொடுத்த வேதையாகும்
சொல்லவே நாலுக் கோர் பரிதான் சேர்க்க
கொற்றவனே மாற்றதுவும் எட்டேயாகும்
தில்லமாமிவ் வேதை யென்றெண்ணாதே
துரைராசசுந்தரனே மகிமை பாரே
565

பார்க்கவே நாதாக்கள் ரிஷிகள் சித்தர்
பண்மை பெறப் பாடிவைத்த பெருநூலப்பா
ஏற்கவே பன்னீராயிரந் தானப்பா
எழிலான கரைகண்ட வேதமாகும்
தீர்க்கமுள்ள யின்னூல் போல் யென்னூலுந்தான்
திட்டமுடனே நாதாக்கள் கூறவில்லை
மார்க்கமுடன் ரகசியங்கள் தான் மறைத்து
மன்னவனே பாடிவைத்தாரே கோமானே.
566

பாடியதோர் நூல்களெல்லாம் மறைப்பு வைத்த
பாலகனே யின்னூலில் மறைப்பே யில்லை
தேடியே பொருள் கண்டு பதமறிந்து
தேற்றமுடன் மாணாக்கள் பிழைக்கவென்று
நாடியே பெருங்கடலாம் சித்தயவான்.
அமிர்தமென்ற திருப்பாலின் கடல்தானப்பா
மூடியதோர் மறைப்பெல்லாம் கண் திறந்து
முயற்சியுடன் தாமுரைத்துத் தந்தானிதாமே.
567

நூலான சதுரகிரி வாப்பஞ்சொல்வேன்
நுட்பமுடன் புலத்தியனே புனித வானே
பாலான தேசமெலாந் திரிந்துவந்தேன்
பாலகனே சதுரகிரி வாப்பமெத்த
சேலான காட்டகத்தே திரிந்துகண்டேன்
செயலானமார்க்கமது சொல்லொணாது
ஆலானமத்திபமா மாலங்காடு
அப்பனே தடாகமுண்டு தோப்புமுண்டே.

568

தோப்பான தோப்புக்குள் மண்டபந்தான்
தோற்றவாயக்கால் குத்துக்கல்லாம்
தாழ்ப்பாளுங் கதவுண்டு சங்கிலிதானப்பா
திண்மையுடன் சிரங்கமது கண்டேனப்பா
காப்பான கணபதியுமங்கே கண்டேன்
கருவான விசேடங்களோ தென்றுக்கால்
மூப்பான சித்தொருவரங்கிருந்தார்
முயற்சியுடன் தரிசனையுங் காணலாச்சே.

569

காணவே தரிசனையுங் கண்டுமல்லோ
கருகினவே தாழ்பணிந்தேனடியேனப்பா
பூணவேயைந்தனுக்கு நடுக்கமாகிப்
புகழுடனே சிரங்குனிந்து நிமிர்ந்தேனப்பா
ஆணவங்கள் தானொடுங்கி நிற்கும்போது
அப்பனே யாரென்றுவினக் கேட்க
தோணமலடியேனுங் கீழ்பணிந்து
தோற்றமுடனே சவுண்யார்சீடனென்றேன்.

570

என்றேனே அவனியார் சீடனென்றேன்
மெய்ஞான தேவதாசிட்டயாரப் போ
குன்றணமகீ போல வாய் திறந்து
கொற்றவனே அகத்தியரும் நீதானோ
தென்திசையில் பொதிகைமுனி நீதானே தான்
தெளிவுடனே யைந்தகியும் கேட்டாரப்பா
வென்றிடவே விதிவணக்கமட்டு யெனப்பா
வேணவுபசாரமுடன் வணங்கிட்டேனே.
571

வணங்கியே நிற்கையிலே சிட்டயாரங்கே
வாய் திறந்து கூறுகிற வண்ணங் கேளீர்
இணங்குமுடன் திரேதாயி னுகத்திலப்பா
மெய்ஞான பிராயங்கள் நேர்ந்தபோது
திணங்குமுடன் மூன்றுயுகஞ் சமாதியப்பா
திற்பரனே குடவாழ்க்கையைத் தமக்கு
கிணங்கவுடனிப் பதியிலமர்ந்தேனென்று
கருத்துடனே வாக்கதுவும் பிறக்கலாச்சே.
572

அச்சப்பாயவ் வார்த்தை கேட்டேனங்கே
அச்சணமே யவ்விடம் விட்டேகினேன் யான்
மெச்சடங்கி யிருந்த சிட்டயாரை விட்டு
மேதண்டக் குகைநீங்கி வந்தேனப்பா
பாச்சலுடன் சதுரகிரி மேற்கே நோக்கிப்
பாலகனே துசி தூரம் சென்றேன் யானும்
மேச்சலுடன் கோணனுமங்கிருந்தான்
மேன்மையுடனென்றனையுங் கண்டிட்டானே.
573

30.1.86.

கண்டானே கோணனுமென் னப்பார்த்து
கானகத்தில் வந்ததொரு குருவேயென்று
தெண்டனிட்டான் கோணனுமங் கேயப்பா
தெளிவுடனேயானுமங் கேகோணனும் போது
புண்டரிகமானதொரு புண்ணியன்றான்
பூபால சுவாமிகளேயாரென்றான்பார்
அண்டர்தொழும்ரிஷி தேவர் நீயோவென்றார்
அப்பனே ஆமென்றேன் புலத்தியனே

575 74

புலத்தியனே புங்கவனே பூபாலா கேள்
புகலரிய காட்டகத்தே சென்றேன்யானும்
நிலம்பெரிய கானகத்தி னதிசயத்தை
நீதியுடன் நான் கேட்க கோணன்றானும்
அலம்பெரிய வதிசயங்கள் சொல்லலுற்றார்
அப்பனே மேற்புலத்தில் கைவர்க்காடாம்
சிலம்பெரிய வனந்தன்லே கைவர்க்காட்டை
சாங்கமுடன் கண்டுமே பயந்திட்டேனே.

575

பயந்திட்டேன் கைவர்செந்தூரங் கண்டேன்
பாலகனே லோகமெல்லாம் பழுத்துக்காட்டும்
நயந்திட்டரவியதுவும் தங்கமாகும்
நாதாந்தத் தாயினதுவருளினாலே
சயம்பான மேமமதுயிறவித்தங்கம்
சுத்தரனையிவ் வேதைபரிசவேதை
அயமதுவும் பழுத்துவிடுமன்புள்ளானே
அப்பனேவிதியாளர் காண்பான்பாரே

576

பார்க்கவே காயாதி கொள்ளலாகும்
பாரினிலே வெகுகோடா சித்துமாண்பர்
ஏர்க்கவே செந்தூரங் கொள்வார் பாரு
யெழிலணைமார்க்கமது யாருங் காணார்
தூர்க்கவே சதுரகிரி வடபாகத்தில்
புசுண்டனை சென்றேன் யான் புலத்தியா கேள்
ஆர்க்கமுடன் வடதிசையாஞ் செல்லும் போது
அவ்வனவே சித்தொளிவைக் கண்டேனே.
577

கண்டேனே நாதாந்தச் சித்தர்தாமும்
கண்டேனே பார்க்கையிலே சித்தர்தாமும்
அண்டையிலே வந்தங்கே யடரவணங்கி
அன்புடனே கைசாத்துச் சிரங்குனிந்து
தொண்டனைப் போல் கரங்குவித்து யுபசரித்து
தோறாமல் விடையதுவும் கேட்கும் போது
சண்டமாருதம் போலவடவயென்றனும்
சாற்றினேன சவுனியை நினைந்திட்டேனே.
578

நினைந்து மேய சவுனியார் சீடனென்றன்
நீதியுடன் யானுமங்கே விடைகள் கூறி
புனைந்து கானகத்தினதிசயத்தைப்
புகழ்ச்சியுடன் கேட்கையிலெரிடயார்தாமும்
அலையுண்டு மலையுண்டு நதியுமுண்டு
அந்தரனை மகாரிடகள் கானநாடு
தினைவிளையும் மகாநாடு புண்ணியபூபா
திருவிளையாள் தானிருக்கும் நாடுமாச்சே.
579

நீடான கானகத்தில் பாசாணந்தான்
நிலம் பெரிய பூமியெல்லாம் சுண்ணக் காடு
காடான வனந்திரமும் பழுக்கும் நேடு
இன்னவனே காயாதியிருக்கும் மேலே
தாடாண்மை கொண்டுமல்லோ வைகுகோடாமாண்பர்
தாரணியில் வந்திறங்கும் திறைந்தகாடு
பாடான சித்தர் கற்பங் கொள்ளுங் காடு
காவலனே யென்றனக்குக் கழறிட்டாரே.

580

ஆட்டப்பின்பு வடபாயேனுமாசரித்து
யெழிலுடனே விடையதுவும் பெற்றுக்கொண்டு
திட்டமுடன் கானகத்திலப்பாயேன்றானும்
தீர்க்கமுடன் சென்றேனேயவ் வனத்தே
சிட்டமுடன் பாசாணக் காடுகண்டேன்
சாங்கமுடன் சதுரகிரிகிழக்கே யப்பா
பட்டயம் போல் மலையொன்று தோப்புவுண்டு
பாலகனே கண்டேனே பண்புள்ளானே.

581

பண்பான கானகத்தில் நின்றேன் யானும்
பரிவான புலத்தியனே பண்புள்ளானே
நண்பான பாசாணம் தானகமேப்பா
நலமான கிடாரமதாய்க் கோடையுண்டு
திண்பான கோடையுண்டு சாடைபாண்டம்
திறமுடனே குகைதனிலே பார்க்கும்போது
தீண்பான கிடாரமது யருகேயப்பா
சார்பான காவலர்கள் கோடையுண்டே.

582

31.1.86.

கோடியாங் காயகற்பந் தெந்தூரந்தான்
கொற்றவனே கொட்டாருக் கும்மலை போலப்பா
தேடவே சித்துமுனிர்டகளப்பா
தேற்றமுடனங் கிருப்பார் காவலாக
நீடவே வதிசயங்கள் கண்டேன் யானும்
நீட்காங்கமானதொரு காயகற்பம்
ஊடவே திரிந்தாலும் கிடையாதப்பா
உத்தமனே கானகத்தின் பெருமை தானே.
582.

பெருமையாம் சதுரகிரி மேற்கேயப்பா
பேரான குகையொன்று குளமுமுண்டு
அருமையாம் வுதகமென்ற சுனையுமுண்டு
அப்பனே பாதாளக் கிணறுண்டுண்டு
ஒருமையாம் கிணற்றில் கிடாரமுண்டு
ஓகோ கோடாதாக்கள் வைத்தவைப்பு
வறுமையது வாராது கண்டபோக்கு
வளாம் பெரியவட்டச் சுமியும் வாசமுண்டே.
583

உண்டான சுனையருகே வதிசயங்கள்
உத்தமனே கண்டேனே கோடியுண்டு
அண்டான தனமுண்டு ரசக்காடப்பா
உத்தமனே கிடாரவகை கோடியுண்டு
பண்டான பண்டாரம் சொல்லொணாது
பாலகனே காயாதி கற்பமுண்டு
தின்னமுடனடவேணும் பார்த்திமல்லோ
திக்கெனவே பயந்துமல்லோ நடுங்கிட்டேனே.
584

நெருங்கினேன் நாலுபுரம் கண்டேனப்பா
நேராக்கிளிருக்குமிடம் குகையும் கண்டேன்
ஒருங்கினேன் பாலர்பட வனத்தைக் கண்டேன்
உத்தமனே விருட்சமது அடவாரத்தில்
கிருங்கிணறு அதகத்தில் தபசியாரும்
கிருகைவேல் நேமமது செய்யும் போது
பருங்கிணறு மேல் நின்று பார்த்தேனப்பா
பாலகனேயெர் தன் கண்டோலாச்சே.

586

மேடையே பயங்கொண்டு மோர்ச்சையாகி
மோகனமாம் பிரமையது மிகவுண்டாகி
வாடையே யானுமல் லோமதி கொண்டேன்
வாமுடனே திகைக் கொண்டநின்ற வண்ணம்
நீடையே பலார்டையார் யென்னைக் கண்டு
நீடங் காங்கமா கவல் லோநிதானங் கொண்டு
தேடையே மேலேறி வடையேன்றன்னை
திகைநீக்கியருள் தந்து தெளிந்திட்டாரே.

587

தெளியவே வரமதுவும் மிகவாய்த் தந்து
தேற்றமுடனுபதேசமுமருளுந் தந்தார்
வளியான தடமெங்கேயென்று கேட்க
அடையேனும் பொதிகைமலையென்றுரைத்தேன்
சாழியேனுக் குத்தாரம் விடையும் தந்து
யெழிலுடனே சாபமது தோரா வண்ணம்
பழியதுவும் நேராமல் திவ்யபாலா
பாலகனே விடைதந்து அருள்தந்தாரே

588

தந்தாரே சைதயானமலையும் விட்டேன்
தாரணியில் வெகுகோடி மாண்பரெல்லாம்
உந்தாரே மாந்தர் பலகர்மமாண்பர்
மகாவனத்தில் சதுரகிரி மலையோரத்தில்
சொந்தமுடனிருந்தவர்கள் கோடாகோடி
அந்தரனே சொல்வதற்கு நாவோயில்லை
இந்தவிதமாயாய முறைத்தோம் தூய்யபாலா
இற்பரனே புண்ணியற்குக் கிட்டுந்தானே. 589

தென்பொதிகை அகத்தியர் தீர்த்தம் கூறுவது.

திட்டமான முறை பொருள்களின்னமுண்டு
கீர்த்தியுள்ள புலத்தியனே தம்பிரானே
மட்டான பொருளுனக்கு உபதேசிப்பேன்
மார்க்கமுடன் சிற்பரனே மகிழ்வாய்க் கேளு
அட்டபுரியெலாந்திரிந்தேனன் புள்ளானே
அசுவனியாரந்தனுக்கு உபதேசித்த
சிட்டமுடன் புதைப்பொருளையாமுமக்கு
சாங்கமுடனுபதேசம் செய்வேன்பாரே. 590

பாரப்பா புலத்தியனே பண்புள்ளானே
பட்சமுடன் யாமுரைப்போம் மகிமை பாரீர்
நேரப்பா பொதிகைமலை வடமேற்கப்பா
நெட்டதான குத்துக்கல் லொன்று தோன்றும்
சீரப்பா கல்லருகே வந்துநின்றால்
சிற்பரனே வசீரி வாக்குண்டாகும்
ஆரப்பா யென்றுசொல்லிக் கேட்பாரப்பா
அங்ஙனவே அத்தாரம் சொல்லல் நன்றே. 591

சொல்லவே குத்துக்கல் தான் சிறக்கும்
சொற்பெரிய காவலது யிருப்பாரங்கே
மெல்லவே யாரென்று வினவிக் கேட்பார்
வித்தகனே அகத்தியனார் சீடனென்று
புல்லவே அத்தாரம் தந்தாயானால்
புட்கரனே யுந்தமக்கு வழிதான் சொல்வார்
அல்லவே அட்போய் நிற்பாயானால்
அப்பனே சீடரையொருவர் காண்பார்தானே. 592.

கண்டதொரு சீடரையாரென்றேயுமப்பா
காவலனே யடர பணிந்து முடைகள் சாய்த்து
தெண்டமுடனஞ்சலிகள் மிகவுஞ் செய்து
தீர்க்கமுடன் வாய்திறந்து மௌனங் கொண்டு
அண்டர்தொழும் சீடரையாரைக் குகைதான் காண
அடியேனும் வந்திட்டேனென்று கூறு
கண்டவுடனுந் தமக்குத் தடங்கள் கூறி
களிப்புடனே சமாதிமுகமனுப்புவாரே. 593

அனுப்புவார் சமாதிமுகம் சென்றேயப்பா
அங்ஙனவே நமஸ்காரம் செய்வாயப்பா
மனதுதவறு வண்ணமது வணங்கி நிற்க
மகாதேவர் சமாதிமுகம் திறக்கும்பாரு
தனுருடனே வாத்தியங்கள் மிகவே கேட்கும்
தற்பரனே சகசோதி ரூபங்காண்பீர்
பனுவுடையரிடரபோலசித்துதாமும்
பரவொளியாய்க் கண்ணுக்குத் தோற்றுவரே 594

தோற்றவே சித்து முனி ரிடையாருந் தான்
தொல்லுலகில் வந்ததொரு மாண்பாரர் தான்
தோற்றமுடன் வினை கேட்கும் காலமப்பா
தெளிவுடனையவன்யார் பேரனென்று
ஆற்றலது நேரமதுத் தாரஞ் சொல்
அப்பனேயுந் தமக்குயா அஞ் சொல்வார்
கூற்றனுக்கிடமதுவும் நேரதப்பா
குருபரனே காயகற்பம் கொள்வீர் தாமே.

595

கொள்ளுவதுந் தான் தவிர புண்ணியபாலா
கொற்றவர்கள் முன்னிருந்த ரிடிகள் சித்தர்
தெள்ளமிர்தமான தொரு முனிவர் தாமும்
தேடியதோர் நூலனைத்தும் கண்ணிற் காண்பீர்
உள்ளபடா தாரத்தில் தொகுப்பையெல்லாம்
உத்தமனேயுந் தமக்கு அபதேசிப்பார்
கள்ளமது நேராது கண்ணியவானே
காசினியில் நீர்தாமும் கதி கொள்வீரே

596

கொள்வீரே சாத்திரங்களிருக்குந் தானம்
குருபரனே காண்பதி நூலெல்லாஞ் சித்தி
அள்ளவே போகாது நீ தானப்பா
அப்பனேயுந் தமக்குத் தொந்தங் கொள்வீர்
தெள்ளமிர்தமயமான நூல்கள் சொல்வேன்
சிந்தரனேயிந்திரனே அருணமாரா
கள்ளமில்லாப் பெருநூலாம் முப்பதாயிரம்
காசினியிலவன்யாருரைத்தவாக்கே.

597

வாக்கானதோர் மந்திரிலட்சமப்பா
வாகுடனே திரேதாயினுகத்திலப்பா
ஆக்கமுடன் பாடிவைத்த ஞானகாண்டம்
அப்பனே பன்னீராயிரந்தானங்கே
நோக்கமுடன் சமாதியது வெட்டாங்காலில்
நுணுக்கமுடன் ஞானக்கும்மாம் பேழைதன்னில்
பார்க்கவே யாருக்குங் காணுமற்றான்
பதுங்குடனே கற்றூணு மடையிற்காணே.
598

காணலாம் பிரணவமாம் சாகரந்தானப்பா
பட்சமுடன் பாடிவைத்த சாகரந்தான்
தோணவே சௌமிய மெண்ணாயிரந்தான்
தோற்ற மல்கற்பாறைக் குள்ளிருக்கும்
மாணவே பெருநூலாம் பட்சிகாண்டம்
மகதேவர் தன்வரத்தால் பாடிவைத்த
ஆணகமாம் பெருநூலா மறுபதாயிரம்
அப்பனே சமாதியது கீழுண்டாச்சே.
599

ஆச்சப்பா மூன்றுங்கால் பழையிலப்பா
அப்பனே வைமகண்ட மெண்பதாயிரம்
மூச்சடங்கியிருந்தசித்து வசுவன்யாரும்
முயற்சியுடன் பாடிவைத்த பெருநூலாகும்
பாச்சலது நோது குருநூலப்பா
பாலகினை பெருநூலாம் பதினாயிரந்தான்
மாச்சலது சதுமகா காண்டமாகும்
மாநிலத்தில் குகைதன்லே காணலாமே.
600